# தமிழ் மற்றும் அறிவியல் படைப்புகள் 2015

ISBN 978-81-931923-8-2
Rs.1500
9 780000 000002 >

GAYATHRI PUBLISHERS
www.gayathripublishers.com

# தமிழ் மற்றும் அறிவியல் படைப்புகள் 2015

ஆசிரியர்கள்
முனைவர் மு.மாரிதாஸ்
முனைவர் க.இராஜு

**காயத்ரி பதிப்பகம் (GTRP)**
பாளையம்கோட்டை
தமிழ் நாடு- 627002

www.gayathripublishers.com

# முன்னுரை

தமிழ்மொழி, கல் தோன்றி மண் தோன்றாத காலத்திற்கு முன்னாலே தோன்றியது நம் தாய் மொழி. வளர்ந்து வரும் அறிவியல் தொழில் நுட்பம், மற்றும் ஆங்கிலம் மொழி, மோகத்தால் நம் தாய் மொழி தமிழ் அழிந்து வருகிறது. இப்போது நாம் அறிவியல் ஆய்வுகளை பிற மொழில் எழுதும் போது பல தவறுகள் வருகிறது. இதனால் நாம் தாய் மொழியில் ஆய்வு கட்டுரைகளை எழுதும்போது, நாம் சிறப்பாக எந்த பிழையும் இல்லாமல் எழுத முடியும். அதனால் “தமிழ் மற்றும் அறிவியல் படைப்புகள்” என்ற தலைப்பில் முதல் படைப்பாக தொகுக்கபட்டு உள்ளது. இந்த படைபிற்காக ஆய்வு கட்டுரைகளை வழங்கிய தமிழ் மற்றும் அறிவியல் ஆய்வாளர்களுக்கு நன்றியை உரித்தகுகிறோம். நமது தாய் மொழியாம் தமிழ் மொழியை கண்ணும் இமையும் போல, நாம் தாய்மொழியை பாதுகாக்க வேண்டும்.

இப்படிக்கு<br>
முனைவர் மு.மாரிதாஸ்<br>
பயோனியர் குமாரசுவாமி கல்லுரி<br>
நாகர்கோயில்<br>
தமிழ் நாடு

GTRP **© 2015 Gayathri Publishers Reserved**.

**GAYATHRI PUBLISHERS**

**Palayamkottai – 627 002,**

**©2015 Gayathri Publishers**

**First published 2015**

**ISBN:** 978-81-931923-8-2

**Price: Rs.1500/-**

GTRP **© 2015 Gayathri Publishers Reserved**.

| வரிசை எண் | தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | குமாரனாசான் கவிதைகளின் திணைக்கோட்பாடு<br>க. முத்துலட்சுமி | 1-5 |
| 2 | மேற்கு தொடர்ச்சி மலை தொடர்களில் உள்ள பெரணிகளும் அதன் அழிவிற்கான காரணங்களும்<br>மு. மாரிதாஸ் மற்றும் க.இராஜு | 6-7 |
| 3 | கண்ணகி மணிமேகலை பாத்திர உருவாக்கத்தில் மீவியல்பும் உளவியலும்<br>ர.ரதி | 8-17 |
| 4 | நீதி நூல்களில் கல்வி<br>ப. சீனிவாசன் | 18-20 |
| 5 | மணிமேகலையில் மணிமேகலையின் துறவு ஒரு கண்ணோட்டம்<br>ர.ரதி | 21-27 |
| 6 | பாரதிதாசன் நாடகங்களில் சமுதாய சிந்தனைகள்<br>உமா | 28-30 |
| 7 | ‘தென்றலின் சுவடுகள்’ கவிதை தொகுப்பில் சமுதாயப் பிரச்சனைகள்<br>ரா.ரேவதி | 31-34 |
| 8 | சிட்டுக்குருவி ஏன் அழிகின்றது அதை எப்படி பாதுகாப்பது<br>ந.சுபாஷ் மற்றும் க. ராஜு | 35-38 |


GTRP © 2015 Gayathri Publishers Reserved.

**Book Editors: M.Maridass and G.Raju. தமிழ் மற்றும் அறிவியல் படைப்புகள் 2015, Published by Gayathri Publishers,Tirunelveli,Tamil Nadu,India dated on 15,December,2015.**

**ISBN :978-81-931923-8-2**

---

# குமாரனாசான் கவிதைகளின் திணைக்கோட்பாடு

## க. முத்துலட்சுமி

தமிழ் துறை மற்றும் ஆய்வு மையம்
அரசு கல்லூரி
சித்தூர்
பின்கோடு - 678104

மின்னஞ்சல்: muthusenthil2010@gmail.com

*மலையாள இலக்கிய வரலாற்றில் தற்காலக் கவிதையின் உயிர்மூச்சாகப் போற்றப்படும் முப்பெரும் கவிஞர்களில் ஒருவர் குமாரனாசான். ஆசான் வாழ்ந்த காலகட்டம் மலையாள இலக்கியத்தில் பெருங்காப்பியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த காலம். கவிதைத் துறையின் எழுச்சிக்குக் காரணமாக அமைந்த ஆசான், உள்ளூர், வள்ளத்தோள் ஆகிய முப்பெருங்கவிஞர்களும் மரபுக் கவிஞர்களாகக் கவிதைச் சோலையில் நுழைந்து படிப்படியாக ரொமாண்டிக் கவிதையின் பால் திரும்பியவர்கள். இவர்கள் இயற்றிய உணர்ச்சிப் பாடல்களும், சிறுகாப்பியங்களும் எண்ணற்றன.*

***ஆசான் ஓர் அறிமுகம் :***

*திருவனந்தபுரம் மாவட்டம் காயிக்கர கிராமத்தில் புத்தன்கடவத்து நாராயணனுக்கும், காளியம்மைக்கும் இரண்டாவது மகனாக 1873 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் நாள் குமாரனாசான் பிறந்தார். இவரது இயற்பெயர் குமாரன். குமாரு என்று அனைவராலும் அழைக்கப்பட்ட குமாரனாசானின் குடும்பம் பொருளாதாரத்தில் நடுத்தர வர்க்கத்தில் பட்டதாயினும் பெயர்கேட்ட குடும்பமாக விளங்கியது.*

*ஆசான் இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் கொண்டிருந்தார். பள்ளித் தலைமை ஆசிரியரின் பணிநிறைவு விழாவில் வாழ்த்துக் கவிதை இயற்றி அனைவரின் பாராட்டையும் பெற்றவர். வடமொழியிலும் ஆங்கிலத்திலும் வங்க மொழியிலும் புலமை கொண்டவர். சிலருக்கு வடமொழியைக் கற்றுக் கொடுத்ததால் அனைவராலும் 'ஆசான்' என்றழைக்கப்பட்டார். ஆசான் தமது 18 ஆவது வயதில் நாராயண குருவைச் சந்தித்தார். 'ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோக'த்தின் செயலாளராகப் 14 ஆண்டுகள் சமூகப் பணியாற்றினார். 'விவேகோதயம்' என்ற இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். படைப்புக் கொடுத்த முக்கியத்துவத்தை ஆசான் மொழிபெயர்ப்புக்கும் கொடுத்துள்ளார் எனலாம். சௌந்தர்ய லகரி, ப்ரபாத சந்த்ரோதயம், ராஜயோகம், மைத்ரேயி போன்றவை ஆசானால் மொழி பெயர்க்கப்பட்டன.*

***ஆசான் கவிதைகளில் திணைக் கோட்பாடு :***

*திணை என்பது ஒழுக்கத்தைச் சுட்டும். நிலத்தினை ஐவகைப்படுத்தி, அகத்திணை, புறத்திணை என இரண்டாகப் பகுத்தனர் தமிழர். ஐந்திணைப் பாகுபாட்டினைத் தொல்காப்பியர் மூன்று வகையாக அமைத்து விளக்குவார். அதாவது,*

1. *முதற்பொருளை அடிப்படையாகக் கொண்டமைதல்*
2. *உரிப்பொருளை அடிப்படையாகக் கொண்டமைதல்*
3. *கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டமைதல்*

*இவ்வடிப்படையில் குமாரனாசான் பாடல்களில் அமைந்துள்ள திணை சார்ந்து அமைந்துள்ள கருத்துக்கள் ஆராயப்பட்டுள்ளது.*

**உள்ளுறை :**

*கவிஞன் தான் கருதும் எண்ணங்களை நேரிடையாகக் கூறாமல் கருதிய பொருளை உட்பொதிந்து பாடுதல் உள்ளுறையாகும். இத்தகைய உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனாகக் கொள்ளும் என்றும் (தொல்.பொருள்.47) கருப்பொருளுடன் கருதிய பொருள் ஒத்து முடியும் (தொல்.பொருள்.48) என்றும் விளங்குவர் தொல்காப்பியர். உள்ளுறுத்து உரைக்கும் இத்தன்மை ஆசானின் கவிதைகளில் முத்திரை பதித்துள்ளது எனலாம்.*

*ஆசானை புற உலகிற்குக் கவிஞனாக அறிமுகப்படுத்திய 'வீணபூவும்' (1908), 'ஒரு கிராம விருட்சத்திலே குயில்', 'கருண' போன்ற படைப்புகளும் குறிப்பாகப் பொருளை உணர்த்தும் பான்மையில் அமைந்தன. வீணபூவில் கருப்பொருளான மலரின் வாழ்வின் மேல் மனித வாழ்வின் தன்மையை ஏற்றிப் பாடுகின்றார் கவிஞர். 141 பாடல்கள் கொண்டது இக்காப்பியம்.*

*" ஓ மலரே ராணியாய் – நீ*
*ஒய்யாரமாய் வீற்றிருந்தாய்*
*பிறப்பவை எலாம் ஓர்நாள்*
*இறக்குமென உணர்த்தவோ – உன்*
*அழகும் சுகமும் எலாம்*
*இழந்து மண்ணில் வீழ்ந்தாய் "*

*என்று தொடங்குகிறதுன் இக்காவியம். இக்கவிதையில் மலரின் பிறப்பு, காதல், இறப்பு என ஒவ்வொரு கட்டமும் பேசப்படுகின்றது. மற்றொரு காவியமான 'கருண', அழகும் சிறப்பும் செல்வமும் மனிதனுக்கு மன ஆறுதலையும் அமைதியையும் நிலையான இன்பத்தையும் தராது. உடலால் பெரும் இன்பத்தினும் மனதால் பெறும் இன்பமே நிம்மதியைத் தரும் என்பதை உணர்த்துகின்றது.*

**தோழி – பாத்திரப்பாங்கு :**

*'தோழி தானே செவிலி மகளே' என்பார் தொல்காப்பியர். தலைவியின் வாழ்வில் இன்றியமையாப் பாத்திரமாகத் தோழியின் பங்கு அமைகின்றது. தலைவியின் மன உணர்வுகளை பலகாலும் தோழியே வெளிப்படுத்துகின்றாள். தலைவியின் களவு வாழ்வினை அறத்தோடு நின்று கற்பு வாழ்வாக மாற்றுபவள் தோழியே. ஆசானின் 'லீல' என்ற காவியத்தில் வரும் தோழியின் பங்கு குறிப்பிடத்தக்கது. லீல தனது குழந்தைப் பருவ நண்பனும் காதலனுமான மதனனைத் தேடி வருமாறு தன் தோழி மாதவியை அனுப்புகின்றாள். மீண்டு வந்த மாதவி, லீலாவிடம் பின்வருமாறு கூறுவதாகக் காப்பியம் தொடங்குகின்றது.*

*" ப்ரணய பரவசே சுபம் நினக்*

குணருக உண்டொரு திக்கில் நின் பிரியன்
குணவதி நெடுமோகினித்திரவி
ட்டுணருக, நான் சகி, நின்ட மாதவி ”

என்று சுயநினைவற்றுக் கிடக்கும் தோழியைத் தேற்ற முயல்கிறாள். இத்தன்மை,

“ நம்மூர்ப் பார்ப்பனக் குறுமகப் போல
தாமும் குடுமித் தலைய மன்ற
நெடுமலை நாடன் ஊர்ந்த மாவே ” (ஐங்.202)

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலும்,

“ நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரும் ஊரோ நம் காதலோரே ” (குறுந்.130)

என்ற குறுந்தொகைப் பாடலும் வெளிப்படுத்துகின்ற, தலைவியின் நிலையறிந்து ஆற்றுப்படுத்தும் தோழியின் புலமையை நினைவுபடுத்துகின்றது.

**அன்பு நிலை :**

தலைவன், தலைவியர் அன்பு நிலை பற்றிக் கூறுமிடத்து,

“ யாயும் யாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே ”

என்று தலைவன் தலைவியரிடையே அன்பு தோன்றுவதற்கு அறிமுகமோ, உறவோ இருக்க வேண்டிய அவசியமில்லை என்பதைக் குறுந்தொகப் பாடல் உணர்த்துகின்றது. இப்பொருண்மையே ஆசானின் ‘சண்டாள பிக்ஷுகி’, ‘துராவஸ்தா’ ஆகிய இரு காவியங்களிலும் விளக்கம் பெறுகின்றது. துராவஸ்தையில் உயர்சாதி நம்பூதிரிப் பெண் தீண்டத்தகாதவன் எனக் கருதப்பட்ட புலையனுக்கு மனைவியாகிறாள். சண்டாள பிக்ஷுகியில் புலைமகள் பௌத்த பிக்ஷுணியாவதோடு, புத்த பிச்சுவைக் காதலிக்கிறாள். மனித வாழ்வின் தோன்றும் அன்பு நிலைக்குச் சாதி உயர்வு தாழ்வோ, பிற ஏற்றத்தாழ்வுகளோ தடையாக அமைவதில்லை என்பதைக் கவிஞர் இக்கவிதைகளில் விளக்குகின்றார்.

தலைவன் தலைவியரிடையே தோன்றும் அன்புநிலையின் தன்மை,

“ நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவின்றே ”

என்றுணர்த்துவாள் குறுந்தொகைத் தலைவி. இதனையே,

“…… யார்
காதல் அன்பின் ஆழம் புரிவது ”

என்று வீணபூவிலும், பழகிய செடியை வேறொரு இடம் நடலாம். ஒரு திசையில் ஓடும் நதியையும் வேறு திசையில் மாற்றிவிடலாம். இவை நடைபெறும். ஆனால் மனதில் ஒருவரை விரும்பிய பின் மறப்பது அரிது என்று ‘லீல’விலும் விளக்குகின்றார் ஆசான்.

**நெஞ்சோடு கிளத்தல் :**

அன்பு வாழ்வில் பிரிவு என்பது தவிர்க்க இயலாததாகவே அமைந்து விடுகின்றது. எனவே தான் தொல்காப்பியர் பிரிவுக்கெனத் தனி இலக்கணம் வகுத்துள்ளார். ஆசானின், ‘சிந்தையில் மூழ்கிய சீதை’ தலைவனைப் பிரிந்து நெஞ்சோடு கிளத்தலாக அமைந்துள்ளது.

*" எட்டுணை போலும் அந்த ராகவன் பிரிவையாற்றாது*
*இதயமே காயமுற்றதெனத் தவித்திருப்பேன் ஓர்க்கால்*
*கட்டுடை விரியன் பாம்பு தலைதூக்கா துறங்கிற்றென்ன*
*கண்துயில் கொண்டது இன்றென் கழிபெருங்காதல் தானும் "*

*என்று ஏங்கும் சீதைக்கு இரவு பெரும் துன்பத்தைக் கொடுக்கின்றது.*

*" கணத்து நீங்கும் இரவு கழிதலைக்*
*காட்டும் சாமத் தொலிகள் கணக்கிட "*

*என்ற சீதையின் வருத்தம்,*

*" நள்ளென நன்றே யாமம் சொல்அவிந்து*
*இனிது அடங்கினரே மாக்கள் முனிவு இன்று*
*நனந்தலை உலகமும் துஞ்சும்*
*ஓர்யான் மன்ற துஞ்சாதேனே "*

*என்ற குறுந்தொகைத் தலைவியைக் காட்சிப்படுத்துகின்றது. இது போன்றே 'சண்டாள பிக்ஷுகி' நாயகியும்,*

*" சிறகிழந்திழை மின்மினி போலவே*
*சென்று மெல்ல நகர்ந்தது மாலையும்*
*இரவு வந்தும் தவித்தனள், உண்டிலள்*
*இருகண் மூடி உறக்கமும் கொண்டிலள் "*

*என வருந்துகின்றாள்.*

*இயற்கையின் நிகழ்வுகளில் தம் வாழ்வினை இணைத்துக் காணும் திணைப்பாடல்களின் தன்மையை ஆசானின் கவிதைகளிலும் காண முடிகின்றது. புன்னை மரத்தினை தமக்கையாகக் கருதி தன் காதலனுடன் பேசுவதற்கு நாணும் தலைவியை நற்றிணையில் காண்கிறோம். இப்பண்பு ஆசானின் 'சிந்தையில் மூழ்கிய சீதை'யில் காண முடிகின்றது.*

*" மரம் செடி மான் முதல் மாக்கள் புள்ளொடு*
*மாந்தர் தேவர் உயிரினம் யாவையும்*
*தாம் எனாதிவர் நேசித்து நெஞ்சினில்*
*தாங்கும் அன்பின் திறத்தினை எண்ணுவேன் "*

*என்று இராமனின் இப்பண்புத் திறத்தை வெளிப்படுத்துகிறாள் சீதை.*

***நிலையாமை :***

*" பாங்கம் சிறப்பின் பல்லாற்றானும்*
*நில்லா உலகம் புல்லிய நெறித்தே "*

*என்ற தொல்காப்பிய காஞ்சித்திணை வரிகள் நிலையாமையை வலியுறுத்துகின்றது. ஆசானின் குறுங்காவியமான 'வீண பூவு' குறியீடாக வாழ்வின் நிலையாமையை உணர்த்துவதாகும்.*

*" விழியே நம்முலகைப் பார்*
*மலரெலாம் வாடி வதங்கிடுமாம்*
*வழிந்தோடும் கண்ணீர் வெள்ளம்*
*மறைந்தபின் எண்ணுபவர் யாராம்?*
*அனைவரும் உணர்ந்து கொள்ளுங்கள்*
*அவனி வாழ்வு ஓர் பெருங் கனவாகும் "*

*இவ்வரிகள் தலைவனைச் செலவழுங்குவித்தற்காக தோழி வலியுறுத்தும்,*

*" இளமையும் காதலும் நின்பாணி நில்லாது*
*கடைநாள் இதுவென்று அறிந்தாருமில்லை " (12)*

*என்ற கலித்தொகைப் பாடலைப் பிரதிபலிக்கின்றது. மேலும்,*

“ தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புகுவதன்றே....
.... நீர்வழிப் படூஉம் புணைபோலாருயிர்
முறைவழிப் படூஉம்.. ”

எனும் புறநானூற்றுப் பாடல் உணர்த்தும் வாழ்வியல் உண்மை ஆசானின் வீணபூவில் பின்வருமாறு அமைந்துள்ளது.

“ வாழும் உயிர் எலாம்
வாழ்விழக்கும் உண்மை
ஆழ்கடலும் நீள்மலையும்
வீழும் தன்புகழ் ஒழியும்
வாழாது எதுவும் என்றும்
சாயாது இவ்விதி உலகில் . ”

ஆசானின் வீணபூவு வாழ்வின் நிலையாமை உணர்த்த , அழகு, செல்வம் இவற்றின் நிலையாமையை உணர்த்துவதாகக், ‘கருண’ அமைந்துள்ளது.

**கையறு நிலை :**

கையறுநிலையைத் தனித்துறையாகவே அமைத்த கவிதைக் களம் சங்க இலக்கியம். வள்ளல்களும், மன்னர்களும் இறந்த போது கவிஞர்கள் தம் வேதனையைக் கவிதையாக்கி அஞ்சலி செலுத்தினர். ஏ.ஆர்.இராஜராஜ வர்மாவின் இழப்பு ஆசானின் ‘ப்ரரோதனம்’ என்னும் கவிதையக வெளிப்பட்டுள்ளது. இத்தன்மை,

“ வல்வேல் சாத்தன் மாய்த்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே ”

என்ற புறநானூற்றுப் பாடலை நினைவுபடுத்துகின்றது.

ஆசானோ ஏ.ஆர்.இராஜராஜ வர்மாவின் மறைவால் இயற்கையே வாய்விட்டலறிக் கலங்குகிறது என்கிறார் தம் கவிதையில்.

“ பறவைகளும் விலங்குகளும் அழுகின்றன
நரியும் ஊளையிடுகின்றது –செந்
நாய்களும் ஓலமிடுகின்றன – சிறு
பூச்சிகளும் ரீங்காரமிடுகின்றன ஆந்தை அலறுகின்றது ”

என்கிறார். மேலும்,

“ தவித்தன விண் மீன்களும்
பொழிந்தன கண்ணீரும்
பறந்து வந்தன குருவிகளும்
புலம்பித் தீர்த்தன சோக மெலாம் ”

என்று இழப்பின் சோகத்தை வெளிப்படுத்தும் தன்மை, பாரியை இழந்த பாரிமகளிர் புலம்பலை நினைவு கூர்கின்றது.

ஆசானின் கவிதைகள் எளிமையும், இனிமையும், கவிதை நலமும் பெற்று மிளிர்கின்றன. இவரது கவிதைகளில் திணை சார்ந்த கொள்கைகள் பலவும் இயல்பாகவே அமைந்துள்ளன. இயற்கையோடு இணைந்த கவிதை மலர்களாக ஆசானின் கவிதைகள் மணம் வீசுவதைத் தெளிவாக உணர முடிகின்றது.

**Book Editors: M.Maridass and G.Raju. தமிழ் மற்றும் அறிவியல் படைப்புகள் 2015, Published by Gayathri Publishers,Tirunelveli,Tamil Nadu,India dated on 15,December,2015.**

**ISBN :978-81-931923-8-2**

# மேற்கு தொடர்ச்சி மலை தொடர்களில் உள்ள பெரணிகளும் அதன் அழிவிற்கான காரணங்களும்

**மு. மாரிதாஸ் மற்றும் க.இராஜு**

பியோணியர் குமாரசுவாமி கல்லூரி,
நாகர்கோயில்,தமிழ் நாடு.
**மின்னஞ்சல்:** maridassugcpdf@yahoo.co.in

பூமியில் முளைத்த முதல் தாவரமாக பெரணிகள் (Pteridophytes) அறியப்பட்டு உள்ளது. இந்த பெரணிகள் பல்லாயிரம் வருடங்களுக்கு (Jurassic Period) முன்னால் இருந்து காணபடுகிறது. அப்போது இந்த பெரணி தாவரங்கள் பெரிய மரங்களாக காணப்பட்டது. தற்போது இந்த பெரணிகள் குருசெடிகளாக, தண்ணீர் நிறைந்த பகுதிகளில் செழித்து வளர்கிறது. இது ஒரு பூக்காத தாவரமாக உள்ளது. இதன் இழையின் பின்புறம் இனபெருக்க வித்துகள் (spores) காணபடுகிறன. இந்த இன வித்துகள் தான் முளைத்து வளர்கிறது. இதன் வாழ்கை சுழற்சி இரு வகையாக உள்ளது.

இந்தியாவில் மொத்தம் 47513 தாவரங்கள் உள்ளன. அவற்றில் 1200 பெரணிகளும் காணபடுகின்றன (Singh & Dash, 2014). தென் இந்தியாவின் மிக பெரிய மலை மேற்கு தொடர்ச்சி மலையாகும் (Western Ghats). மேற்கு தொடர்ச்சி மலை, ஏறக்குறைய 1600 கிலோமீட்டர் தூரம் வடற்கே குஜராதில் உள்ள தப்தியில் இருந்து தெற்கே தமிழ் நாட்டில் உள்ள கன்னியாகுமரி வரைக்கும் உள்ளது. மேற்கு தொடர்ச்சி மலையில் சராசரியாக 2000 முதல் 6000 மி.மீ வரை மழை பெய்யும். இந்த மலை ஒரு பசுமையான, அடர்ந்த காடுகள் நிறைந்த பகுதி ஆகும். இப்பகுதியில் பல நீர் ஓடைகளும், அடர்ந்த உயரமாக மரங்களும், அறிய வகை தாவரங்கள் மற்றும் விலங்குகளும் காணபடுகின்றன. இவற்றில் தோரயமாக 15,000 தாவரங்கள் காணபடுகிறது. இவற்றில் 329 பெரணிகள் காணபடுகிறது. களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், மேற்கு தொடர்ச்சி மலையின் தென் பகுதியாகும். இந்த மலையில் மொத்தம் 192 பெரணிகள் காணபடுகிறது. அவற்றில் பல பெரணிகள் அழியும் தருவாயில் உள்ளது. நான் கடந்த பத்து வருடமாக மேற்கு தொடர்ச்சி மலைகளில் உள்ள பெரணிகளை ஆராய்ந்து வருகிறேன். அவற்றில் பல வகைகளாக காணபடுகிறது. பெரும்பாலும், இவைகள் மழை காலங்களில் சிறப்பாக வளர்கிறது. பெரும்பாலான பெரணிகள் கோடைகாலங்களில் அழிந்து விடிகிறது. ஒரு சில பெரணிகள் முழுமையாக அழியாமல் தண்டு மற்றும் வேர் பகுதி மட்டும் அழியாமல் பாதுகாப்பாக பாறைகளிலும் மட்டும் மரங்களும் பிடித்து கொண்டும் அழியாமல் உள்ளது. குபெர்சியா ( Huperzia species)

இனங்களில் (spore) விதைகள் சுமார் பதினைந்து வருடங்கள் முளைக்காமல் இருக்கும். இதனால், இவைகள் அழிவதற்கும் இதுவும் ஒரு காரணமாகும். இந்தியாவில் பெரணிகள் மூலிகை தாவரமாக பயன்படுகிறது. இவற்றில் பத்து சதவீதம் பெரணிகள் பல காரணங்களுக்காக, மருத்துவம், அலோபதி, ஹோமாபதி, யுனானி, மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள் தயாரிக்க முழு பெரணியும் பிடுங்கி அளிக்கபடுகிறது. மேலும் போதுமான மழை இல்லாமலும், காலம் மாறி மழை பெய்வதாலும் பெரணிகள் அழிவதற்கு முக்கிய காரணமாக உள்ளது.

## முடிவுரை

பெரணிகள் வாழ்விடம் நீர் நிறைந்த பகுதிகளில் செல்வ செழிப்புடன் வாழ்கிறது. இந்த பெரணி தாவரங்கள் வாழ சிறந்த இடமாக மேற்கு தொடர்ச்சி மலை உள்ளது.

## References

**Singh, P. & Dash, S.S. 2014.** *Plant Discoveries 2013 – New Genera, Species and New Records*. Botanical Survey of India, Kolkata.

**Book Editors: M.Maridass and G.Raju. தமிழ் மற்றும் அறிவியல் படைப்புகள் 2015, Published by Gayathri Publishers,Tirunelveli,Tamil Nadu,India dated on 15,December,2015.**

**ISBN :978-81-931923-8-2**

# கண்ணகி மணிமேகலை பாத்திர உருவாக்கத்தில் மீவியல்பும் உளவியலும்

**ர.ரதி**

**முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**தமிழ்த்துறை&ஆய்வு மையம்,**
**அரசுக்கல்லூரி சித்தூர்,**
**பாலக்காடு, கேரளம்.**
**மின்னஞ்சல்:** rathi.r1988@gmail.com

சிலப்பதிகாரம் கோட்பாடுகள் சார்ந்தும், மதம் சார்ந்தும், வாழ்வியல் சார்ந்தும் இது போன்ற பல முறைகளில் வாசிக்கப்பட்டிருப்பினும், இளங்கோவடிகளின் மனம் சார்ந்தும் வாசிக்கப்படும் போதுதான் சாதாரண ஒரு காப்பியக்கதைக்கு இயற்கை இறந்த நிகழ்வுகளை உள்ளடக்கியதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ள இயலும். அதே போல ஒரே காலச்சூழலில் படைப்புருவாக்கம் பெற்ற மணிமேகலையிலும் இவற்றின் தொடர்ச்சி நீடிப்பதன் அர்த்தத்தை விளங்கிக் கொள்ள இயலும். மேலும் இத்தகைய நம்பிக்கைகள், இவர்களுக்கு மதம் சார்ந்த விஷயத்தினாலா? அல்லது சூழல் சார்ந்து, சமுதாயத்தில் நிலவிய பற்பல எண்ணங்களாலா? என்பது போன்ற கருத்தியல்களை விளங்கிக் கொள்ள இயலும். இவ்வுலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் மனித மனம் ஒவ்வொரு காரணங்களைக் கட்டமைத்து உருவாக்கி வைத்திருக்கிறது. அதற்கேற்றாற்போல் இளங்கோவடிகள் தன் உரையாடலை எவ்வாறு நிகழ்த்தியுள்ளார் என்பதையும், அறம் சார்ந்தும் பத்தினி வழிபாட்டை உயர்த்தவுமே இவர் இதைப் படைத்தார் எனின்

- அதன் தேவை என்ன?
- அதே போல மணிமேகலையை அறச்செல்வியாக்குவதில் சாத்தனாருக்கு என்ன அக்கறை?
- சமுதாயத்தைச் சீர்திருத்த பல்வேறு வழிகள் இருப்பினும், இயற்கை இறந்த நிகழ்வுகளை முன்னிறுத்தி அவற்றை முக்கியத்துவப்படுத்திக் காட்ட வேண்டியதன் தேவை என்ன?
- மனிதன் அக்காலச் சூழலில் நம்பிக்கை கொண்டு அதற்கு ஆட்பட்டிருப்பதை அறிந்து அவ்வாறு சொல்வதே மேல் எனக் கொண்டனரா?
- இல்லை இந்நம்பிக்கை இவர்களுக்கே இருந்துள்ளதா?

என்பவற்றை அறிய ஆசிரியர்களின் மனம் சார்ந்து உளவியல் அடிப்படையில் அணுகும் போதுதான், அவர்கள் மொழி சார்ந்து கட்டமைக்கப்பட்ட சில விஷயங்களுக்குள்ள அர்த்தத்தை விளங்கிக் கொள்ள இயலும். மட்டுமல்ல எந்தெந்த இடத்தில் எந்தெந்த நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை எவ்வாறு நிகழ்த்திச் சென்றிருக்கிறார்கள் என்பது சிந்தித்தற்குரியது. அதோடு இயற்கை இறந்த நிகழ்வுகளை முன்னிறுத்தி பாத்திர உருவாக்கம் என்பது எவ்வாறு கட்டமைக்கப்பட்டிருக்கிறது? என்பதும் இங்கு விவாதத்திற்குரியதாக அமைகிறது.

**சிலம்பு மணிமேகலை உருவாக்கம்**

சமுதாயத்தில் நிகழ்ந்த சாதாரண நிகழ்வுகளுக்கு உயிர் கொடுக்க முனைந்த ஆசிரியர்கள், 'அந்நிகழ்வு தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருப்பதன் அடிப்படைக் காரணம் என்ன?' என்பதை ஆராய்ந்து, அதனை சமுதாயத்தினின்று களைய ஒரு பெருமுயற்சி மேற்கொண்டிருக்க வேண்டும். அதன் வெளிப்பாட்டு வடிவங்களே சிலப்பதிகார மணிமேகலையின் மூலம் காட்டப்படும் மறப்புரட்சியும், அறப்புரட்சியும். இதை மெய்ப்பிக்க உதவும் வகையில் வையாபுரி பிள்ளையவர்கள் தமது காவிய காலம் என்னும் நூலில்,

"இளங்கோவடிகட்கு முன்னே வழங்கப்பட்டு வந்த ஒரு பழங்கதையை எடுத்துக்கொண்டு, அதனை இளங்கோவடிகள் தனது மனோபாவனையில் சித்தரித்துள்ளதே சிலப்பதிகார காவியம்"

(இளங்கோவடிகள் யார்?, ப.159)

என்று குறிப்பிடுவதாக ரகுநாதன் காட்டும் கருத்து நோக்குதற்குரியது. இதே கருத்து மணிமேகலைக்கும் பொருந்தும். இந்த விஷயத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது,

"உலகப் புகழ் பெற்ற படைப்புகள் எல்லாம், புதிதாகக் கதையை உருவாக்கிப் படைக்கப்பட்டவைகளைவிட பழைய தொன்மங்களின் மேல் மறுபடைப்பு செய்யப்பட்டவைகளாகவே இருக்கின்றன"

(www.srmuniv.av.in)

என்ற ரெனிவெல்லக்கின் கருத்தும் இதனையே வலியுறுத்துகின்றது.

**காப்பியத்தில் மீவியலின் இடம்**

"சுவையைப் பெருக்கியுதவும் வகையில் எல்லை மீறிய நிகழ்ச்சிகளை உத்தியாகக் கையாள்வது எல்லா நாட்டிலும் உள்ள மரபாகும்"

(சிலப்பதிகாரச் செய்தி, ப.55)

என்னும் அடிப்படையில் பார்க்கும் போது, காப்பியத்தில் மீவியல் நிகழ்வுகள் பாத்திரங்களின் இயல்பை, ஆசையை, விருப்பத்தைக் கூட்டுவதற்காக காப்பிய ஆசிரியனால் கையாளப்படும் ஒரு உத்தி முறையாகும். இதை உளவியல் அடிப்படையில் பார்க்கும் போது,

"படைப்பாளி என்பவன் தன் படைப்பைக் கூட்டு நனவிலி நிலையிலும் (COLLECTIVE UNCONSCIOUS) படைக்கலாம். நனவு நிலையிலும் படைக்கலாம். இங்கு கூட்டு நனவிலி எனப்படுவது பாரம்பரிய சக்திகளால் உருவாக்கப்பட்ட ஓர் உளவியல் பண்பு. இதில் ஓர் இனத்தின் நம்பிக்கைகள், கருத்துக்கள், புராணங்களினூடான மூலப்படிமங்கள் (ARCHYTYPES) படிந்திருக்கும்"

(Paalveli-athirvagal.blogspot.com/2011/08/blog-spot)

என்ற கார்ல் குஸ்டாவ் யுங் (CARL GUSTAR YUNG) -கின் கருத்தும் இதற்கு அரண் செய்வதாக உள்ளது. இந்த அடிப்படையில் நோக்கும் போது படைப்பாளி என்பவன் தன்னுடைய கூட்டு நனவிலி மனத்தினூடாகக் கண்ட உட்காட்சி அனுபவங்களையே தன்னுடைய படைப்பினூடாக வெளிப்படுத்துகின்றான். அந்த வகையில் சிலப்பதிகார மூலக்கதைத் தவிர்த்த அனைத்து அனுபவங்களும் படைப்பாளி உட்காட்சியினூடாகக் கண்ட கனவுகளே.

**கண்ணகியின் மீவியல்பு அடிப்படை**

பிரெஞ்ச் பெண்ணியவாதி சைமன் –டி –பௌவயார், "பெண் பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறாள்" என்று கூறியது போல கண்ணகியும் உருவாக்கப்படுகிறாள். இயல்பாகவே

புகாரில் அப்பாவியாகக் காணப்படும் கண்ணகி சமுதாயத்தில் வீரப்பத்தினியாக உயர்வது எப்படி? இதை உளவியல் அடிப்படையில் அணுகும் போது,

"பிரிவுக்காலத் துன்பத்தை, ஞான எண்ணங்களை உருவாக்கும் காலமாக வடித்து, தன் இன்பங்களைத் தியாகம் செய்து, காதலன் தனக்கு நாப்புலரவாடி, காதலன் மேல் வந்த பழிக்கு வஞ்சினம் கொண்டு வாழ்ந்த வாழ்க்கைத்தன்மையே அவளைக் கற்பென்னும் திண்மை நெஞ்சம் கொண்ட பெண்ணாக ஆக்குகின்றது"

(ஆய்வுக்கோவை, ப.315)

எனலாம். இதற்கு நல்ல ஒரு எடுத்துக்காட்டு, புகார் காண்டத்தில் நாடுகாண் காதையில், காவிரியின் தென்கரையில் மலர் சூழ்ந்த சோலையில் இளைப்பாறத் தங்கியிருந்த கோவலனையும், கண்ணகியையும் யாரென அறிய வம்பப் பரத்தையும் (புதிதாக பரத்தமை மேற்கொண்டவள்), வறுமொழியாளனும் (பயனில பேசும் காமுகன்) "இவ்விடத்துக் காமனும் அவன் தேவியுமாகக் காணப்படுகின்ற இவர் யாரெனக் கேட்டு ஈங்கு அறிகுவம்" என்று, கவுந்தியடிகளை அணுகி, "நும்மோடு வழிவந்த இவர் யார்?" எனக் கேட்கின்றனர். அதற்கு கவுந்தியடிகள், "மக்கள் காணீர் மானிட யாக்கையர்" என்கிறார். இதில் 'மக்கள் காணீர்' என்றதற்கு 'இவர்கள் என்னுடைய மக்கள்' என்பது பொருள். இது அவர்கள் கேட்ட கேள்வியின் பதிலும் கூட. அதிலேயே "மானுட யாக்கையர்" என்றது எதற்காக? இவ்விடத்தில் அவர்கள் கோவலன் கண்ணகியரை, "காமனும் அவன் தேவியும் போல்வர்" என்றதை கவுந்தியடிகள் கேட்டிருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே அவர்,"இவர்கள் நீர் கூறிய காமனும் அவன் தேவியுமல்லர். மானுட யாக்கையர்" என்பதாகக் கொள்ள இயலும். ஆனால் உரையாடலில்,

"காமனும் தேவியும் போலும் ஈங்குஇவர்
ஆரெனக் கேட்டீங்கு அறிகுவம் என்றே
நோற்றுணல் யாக்கை நொசிதவத் தீருடன்
ஆற்றுவழிப்பட்டோர் ஆரென வினவஎன்
மக்கள் காணீர் மானிட யாக்கையர்" (நாடுகாண் காதை, 221-225)

என்பதிலிருந்து "மானுட யாக்கையர்" என கவுந்தியடிகள் கூறியதை இவ்வாறுதான் புரிந்து கொள்ள இயலும்.

இவ்வாறு கவுந்தியடிகள் கூறியதற்கு, "கற்றறிந்தீர்! நும் மக்கள் என்றீர்! ஒரு வயிற்றில் பிறந்தோர் கணவனும் மனைவியுமாகக் கூடி வாழ்க்கை நடத்துதல் உண்டோ? எனக் குறும்பாகக் கேட்டு எள்ளி நகையாடுகின்றனர். இதனால் கோபம் கொண்ட கவுந்தியடிகள் அவர்களை, "முள் நிறைந்த காட்டின்கண் முது நரியாகுக!" என சபிக்கிறார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த கண்ணகி, "ஒழுக்கத்தினின்றும் நீங்கியோர் நீர்மை அல்லாத தீய மொழிகளைக் கூறினாலும் அறியாமை என்று அறிதல் வேண்டும்" என்று கூறி மீண்டும் கவுந்தியடிகளைத் தொழுது, "செய்தவத்தீர்! நும் முன் இத்தவறிழைத்த இவர்க்கு இக்கடிய சாபம் நீங்கி உய்வதற்குரிய காலத்தை அருள்வீராக!" என்று கூறும் மனோப்பக்குவம் கண்ணகிக்கு எங்கிருந்து கிடைத்தது? கவுந்தியடிகளுக்கே அறிவுரை வழங்கும் திறம் எவ்வாறு வாய்க்கப் பெற்றது? இது அவளுக்கு அவள் தனிமை கற்றுத் தந்த அறிவுப் பாடம் என்பதல்லாமல் வேறு என்னவாக இருக்க இயலும்? அதுமட்டுமல்ல,

இந்த தனிமையே அவளைத் திண்மை நெஞ்சம் கொண்டவளாகவும், தவறுகளைச் சுட்டிக் காட்டி அதை நெறிப்படுத்தும் திறம் கொண்டவளாகவும் உருவெடுக்க வைக்கிறது. இதை இன்னும் சரியாகக் கூற வேண்டுமாயின் கண்ணகிக்கு, தன் மனதில் கொண்ட திண்மையே மதுரையை எரிக்கும் ஆற்றலைப் பெறச் செய்தது. இதைத்தான் வள்ளுவர்,

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெரின்"

(குறள்-666)

என்று கூறி வைத்துள்ளார். ஆகவேதான் கற்புத் திண்மையைக் கடைபிடிக்கும் எப்பெண்ணுக்கும் இது வாய்க்கப்பெறும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால் இதை இளங்கோவடிகள் வெளிக்காட்டும் திறம் நோக்குதற்குரியது.

**கண்ணகியில் மீவியல்பு உருவாக்க முயற்சிகள்**

கண்ணகி புகார் நகரில் இருக்கும் போது ஒரு கனவு காணுகின்றாள். அதை தேவந்தியிடம் கூறும் போது, "நேற்று இரவு என் கணவன் கனவிலே வந்து என் இரு கைகளைப் பற்றி அழைத்துப் போக, ஒரு பெரிய நகரில் புகுந்தோம்! அந்நகரிலே வாழும் மக்கள் இடு(பொய்த்) தேளைப் பிடித்து என் கணவன் மீது போடுவது போல, ஏலாத ஒரு பழிச் சொல்லை எங்கள் மீது இட்டனர். அப்பழிமொழியால், கோவலனுக்குத் தீங்கு நேர்ந்தது என்று பிறர் சொல்லக் கேட்ட யான், அரசன் முன் சென்று வழக்குரைத்தேன்! அதனால் அவ்வரசனோடு அவ்வூருக்கும் தீங்கு நேர்ந்தது" என்று கூறி, "அதனால் ஏனோ என் நெஞ்சம் வருந்துகிறது" என்றும், "இவையனைத்தும் தன்னுடைய தீவினைப் பயன் போலும்" என நொந்து கொள்கிறாள்.

இத்தகைய தீங்கான கனவு காணும் போது, நம்மைச் சார்ந்தவர்களுக்கு ஏதேனும் நிகழ்ந்து விடுமோ எனக் கவலை கொள்வதும், வருந்துவதும் இன்றுவரை இருந்து கொண்டுதான் இருக்கிறது. இதற்கு கண்ணகி மட்டும் விதிவிலக்காக இருந்து விட முடியுமா என்ன? இருப்பினும் இது இவ்வாறு இருக்க, இக்கனவின் இறுதி பற்றிக் குறிப்பிடும் போது,

"நற்றிறம் கேட்கின் நகையாகும் பொற்றொடீஇ"

(கனாத் திறம் உரைத்த காதை-54)

என்று கூறியதன் காரணம் என்ன? அதாவது கோவலன் இறந்தது போலவும், இறந்த கணவன் மீண்டு வருதலும், அவளை வானவூர்தியில் அழைத்துச் செல்வது போலவும் கனவு கண்டிருக்கிறாள். இவை அனைத்தும் நடப்பியல் நிகழ்வுக்கு மாறானவை. ஆகவேதான் தேவந்தியிடம், இதை கேட்டால் சிரிப்புதான் வரும் என்பது போலக் கூறுகின்றாள். இங்கு சாதாரண நிலையில் இருக்கும் கண்ணகிக்கு நகை தோன்றுதல் என்பது இயல்பானது. ஆனால் இது அத்தகைய நடவாத நிகழ்வுகளையும் நடந்தது போன்று நம்பச் செய்ய இளங்கோவடிகள் கையாண்ட மீவியல் செயல்பாடுகளின் முன்னோட்டம் என்பது மிக முக்கியமான ஒன்று.

பாத்திர உளவியலின்படி பார்க்கும் போது, கணவன் எப்பொழுது வருவான் எனக் காத்துக் கொண்டிருப்பவளுக்கு இது போன்று எதிர்மறையான எண்ணங்கள் எழுதல் என்பது இயல்பு. எப்பொழுதும் மனதில் நடக்காத ஒன்றை நடந்து விடுமோ என்று நினைத்து பயந்து கொண்டிருத்தல் என்பது அனைவருக்கும் நிகழக்கூடியதே. அதன் வெளிப்பாட்டு நிலையே கண்ணகியின் கனவு.

இவ்வாறு சாதாரண நிலையில் காட்டப்பட்ட ஒரு பெண்ணை மீவியல்பு கொண்டவளாகக் காட்டி, அவளை தெய்வத்தன்மைக்கு உயர்த்துதல் என்பது நினைத்த மாத்திரத்தில் நிகழக்கூடியவை அல்ல. அதை நிகழ்த்துவதற்கு இளங்கோ கையாண்ட வழிமுறைகள் மிக நுணுக்கமானவை. அவற்றில் ஒரு சில இங்கு எடுத்துக் காட்டப்படுகிறது.

கண்ணகியை மீவியல்பு கொண்ட ஒருத்தியாகக் காட்டுவதற்குண்டான முயற்சிகள் மதுரைக்காண்டத்தில் இளங்கோவடிகளால் செயல்படுத்தப்படுகிறது. வேட்டுவ வரியில் "இவ்வுலகிற்கெல்லாம் ஒப்பற்ற மாமணிபோன்று மிக்க ஒளியைத் தரும் தெய்வமகள்" எனக் கண்ணகியைக் குறிப்பிட தெய்வமேறப்பெற்ற சாலினியின் மூலம்,,

"கொங்கச் செல்வி குடமலையாட்டி
தெந்தமிழ்ப் பாவை செய்தவக்கொழுந்
தொரு மாமணியாய் யுலகிற் கோங்கிய
திருமாமணி"

(வேட்டுவவரி, 47-49)

என்று கூற வைக்கிறார்., கவுந்தியடிகள் மூலம், "கற்பாகிய கடமை மேற்கொண்ட இத்தெய்வமே அல்லாது, வேறு பொலிவுடைய தெய்வம் ஒன்றினையும் காணவில்லை" என்பதை,

கற்புக்கடம் பூண்ட வித்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண்டிலமால்"

(அடைக்கலம் கொடுத்த காதை, 143-144)

என்றும் பேச வைத்திருக்கிறார். முன்னர் சாலினி சொன்ன புகழுரைகளுக்கு கண்ணகி, "இம்மூதறிவுடையாள் ஏதோ மயக்கத்தால் இவ்வாறு கூறினாள் போலும்" என்று ஏற்க

மறுக்கிறாள். ஆனால் கவுந்தியடிகள் கூறியதற்கு மட்டும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இதற்குக் காரணம் என்ன? கற்புடைய பெண்டிருக்கு சாதாரண மாந்தரினின்று ஒரு தெய்வீக சக்தி உண்டு என்று நம்புகிறாள் அல்லது நம்பவைக்கப்படுகிறாள். இதற்கு ஆதாரமாக புகார் நகரில் வாழ்ந்த ஏழு கற்புடைய பெண்டிரைப்பற்றி அவள் கூறுவதினின்றே அறிய இயலுகின்றது. இவ்வாறு நம்பவைக்கப்பெறும் விஷயங்கள் உடனே நடைமுறைப்படுத்தப் பெறுவதில்லை.

கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டதும் முதலில் சீறி எழும் கண்ணகி, சாதாரணப் பெண்ணைப் போலவே அழுது புலம்பிக் கொண்டு, தன் கணவன் கள்வன் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக ஒற்றைச் சிலம்பை ஏந்தியவளாய் நகருள் செல்கிறாள். அவ்வாறு செல்லும் கண்ணகியைக் கண்ட மக்கள், “செம்பொன்னாலான சிலம்பு ஒன்றினைக் கையிலே ஏந்தியவாறு புதிய பெரிய தெய்வம் வந்துள்ளதே!” என்றும், “இக்காரிகை தெய்வத்தன்மை பொருந்திய பெருமையுடையவள் போலும்!” என்று மக்கள் கூறியதைக் கண்ணகி கேட்டிருக்கலாம். இவை யாவும் கண்ணகிக்கு, தனக்கு தன்னை மிஞ்சிய ஒரு சக்தி உண்டு என்பதை நம்ப வைப்பவையாகவே அமைகின்றன. ஆயினும் இதை கண்ணகி உணர்ந்தது போன்று எவ்விடத்திலும் குறிப்புகள் இல்லை. இங்கு பாத்திரத்தின் உளவியல் என்பது நடத்தைசார் முறையில் நோக்கப்படுவதால் அப்பாத்திரமே அதை உணர்ந்து கூறும் போதுதான், அதை கருத்தில் கொண்டு ஒரு முடிவுக்கு வர இயலும்.

கோவலன் இறந்த செய்தி கேட்டதும், அச்சத்தாலும், விரக்தியாலும் வீதிவழியே புலம்பிச் சென்றவள், “காய் கதிர் செல்வனே! என் கணவன் கள்வனோ?“ எனக் கேட்பது, அக்கால கட்டத்தில் இயற்கைக்கு தன்னை மிஞ்சிய ஒரு சக்தி உண்டு என்ற நம்பிக்கையில் கதிரவனை அழைத்து புலம்பி அழுததாயிருக்கலாம். அவ்வாறு அழுதழுது மயங்கிய நிலையில் விழுந்து கிடக்கும் அவளுக்கு ஏதாவது ஒரு அதிசயம் நிகழ்ந்து தன் கணவன் எழுந்துவிட மாட்டானா? என ஏங்கும் நிலையில் இருக்கும் அவள் உள்ளத்திற்கு, கோவலன் தன்னோடு எழுந்து பேசியது போன்ற உணர்வு ஒரு பிரமையாகக் கூட இருக்கலாம்.

இதைக் கண்ணகி கூற்றின் வாயிலாகவே உணர்ந்து கொள்ள இயலும். அதாவது, “இஃது என்ன மாயமோ? மற்று யாதோ? என்னுள்ளத்தை மயக்கியது ஒரு தெய்வமோ?” என்று புலம்புவது எதைக் காட்டுகிறது? இது போன்ற விஷயங்களை அவள் இன்னும் நம்பவியலா நிலையிலேயே இருக்கிறாள் என்பதையே காட்டுகிறது.

இவ்வாறு சாதாரண ஒரு பெண்ணிற்கு, தெய்வத்தன்மை இருப்பதாகப் பலரும், பலகட்டத்தில் கூறும் பொழுது ஒரு வேளை இருக்குமோ என்ற எண்ணத்தில் அவள் அதுவாகவே மாறிவிடுதலும் கூடும். அல்லது அவள் வேறு ஒரு கற்பனை உலகிற்கு சென்று விடுதலும் கூடும். இந்த ஒரு முறையில் கண்ணகியை வாசிப்பதற்கு இடம்தருவதாக சிலப்பதிகாரம் அமைகின்றது.

கண்ணகி மதுரையை எரிக்க சூழுரைத்திருக்கலாம் என்று உளவியல் அடிப்படையில் ஒரு காரணம் கூறப்படுகிறது. இது அவளது பண்பு மீட்சிக்கொரு அடையாளமாக அமைந்து சமூகத்தில் நிலவும் ஒழுக்கமற்ற செயல்பாடுகளை அழித்தொழிக்க வேண்டுமென்பதையே காட்டுகிறது.
இவ்வாறு மதுரையினின்றும் நீங்கிய கண்ணகி கணவனை இழந்த வேதனையாலும், எதிர்காலம் குறித்த கனவு தகர்க்கப்பட்டதாலும், தன்னை ஒரு இருள் சூழ்ந்து கொண்டது போன்ற உணர்வில் மனம் போன போக்கில் சென்று, இறுதியாக இவ்வுலக வாழ்வை நீக்குதற்குண்டான முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம். அல்லது வேடர்கள் கண்டது போல் வேங்கை மரத்தடியில் உண்ணா நோன்பு மேற்கொண்டு உயிர் துறந்திருக்கலாம். இது வரை நிகழ்ந்த நிகழ்வுகளே இளங்கோ செவிவழியாகக் கேட்ட கதை. இதற்கு கற்பனை மெருகேற்றியும், தன்னுடைய நோக்கத்திற்கேற்ப சில மாறுபாடுகளை மேற்கொண்டும் இதனை ஒரு காப்பியமாக இளங்கோவடிகள் படைத்தளித்திருக்கலாம். இவ்வாறு பாத்திரத்தின் மீவியல் என்பது உளவியல் அடிப்படையில் பார்க்கப்பட்டது.

**கண்ணகி மீவியல்பின் உச்சம்**

மேற்கூறிய நிகழ்வைக் காப்பிய நோக்கோடு பார்க்கும்போது கண்ணகி, "காய் கதிர் செல்வனே! என் கணவன் கள்வனோ?" எனக் கேட்கும்போது கதிரவன், "ஆம், இல்லை அல்லது இதற்கு பாண்டியனே பதில் கூறுதற்குரியவன்" என விட்டிருக்கலாம். ஆனால்,

"கருங்கயற்கண் மாதராய்! ஒள்ளெரியுண்ணு மிவ்வூர்"

(துன்பமாலை-53)

என்று கூற வேண்டியதன் தேவை என்ன? நிரபராதியான தன் கணவனை கள்வன் என்று பழி சுமத்தி கொன்றுவிட்டனரே என்ற ஆதங்கமும், எதிர்காலக் கனவு முழுவதும் இப்படி பகுதியிலேயே அழிந்துவிட்டதே என்ற ஆவேசமும் மனதை எரித்துக்கொண்டிருக்கும் வேளையில், அதைத் தூண்டிவிடுவது போலல்லவா இந்த பதில் அமைந்திருக்கிறது. ஆகவே மதுரையை எரிக்க வேண்டுமென்ற ஏவலும், துணிவும் கதிரவன் மூலமே கண்ணகிக்கு கிடைக்கிறது. மேலும் புகாரில் கண்ட கனவையும் இவ்விடத்தில் நினைத்துப் பார்ப்பதாக அமைத்து கண்ணகியின் ஆவேசத்தை இன்னும் மிகைப்படுத்திக் காட்டுகிறார். இவை அனைத்தும் ஒன்றிணைந்து கண்ணகியை மதுரையை எரிக்கும் அளவிற்கு கொண்டு செல்வதாகக் காட்டுகிறார். இங்கு சிந்திக்க வேண்டியது என்னவெனில்,

- கோவலன் ஆராயாது கொல்லப்பட்டான் என்பதை அறிந்திருக்கக் கூடிய பூதக்கடவுளும், மதுரையை அழிக்கும் போது முன் தோன்றிய மதுராபதி தெய்வமும் என்ன செய்து கொண்டிருந்தன?
- ஊழினால் கொலை செய்யப்பட்டான் எனில் மதுரை எரியூட்டப்படுதலின் முன்வினைதான் என்ன?
- ஊழினால் கொலை செய்யப்பட்டானெனில் கோவலனது இறப்பு கொலை அல்ல, தண்டனையே. இதைக் கதிரவன் உரைக்காதது ஏன்?
- இதை உணராமல் நகரைத் தீக்கிரையாக்கிய கண்ணகியின் செயல்தான் எவ்வாறு ஏற்றம் பெறும்?
- கணவன் இறந்த அதிர்ச்சியினால் இதை ஆவேசம் கொண்டு செய்தாளாயினும், மதுரையை எரிக்கும் ஆற்றல் பெறும் போதே அவள் தெய்வநிலைக்கு உயர்த்தப்படுகிறாள். அப்போது கூடவா அவள் உணரவில்லை?
- கோபாவேசத்தில் இருந்ததனால்தான் என்று கொண்டாலும், அக்னி தேவன் கண்ணகியிடம் தீயினின்றும் பிழைத்தற்குரியோர் யார் யார்? என கேட்கும் போது, "அந்தணர், அறவோர், பசு, பத்தினிப்பெண்டிர், மூத்தோர், குழவி" என்று கூறியது மட்டும் எவ்வாறு?
- இங்கு குறிப்பிடும் அந்தணர் அனைவரும் நல்லவர்கள் என்பதை எந்த அடிப்படையில் கொள்வது? மட்டுமல்லாது,
- மதுரையை அழிக்க அக்னிதேவன்,

"பால்புரை வெள்ளயிற்றுப் பார்ப்பனக் கோலத்து"

(அழற்படுகாதை-48)

தோன்றக் காரணம் என்ன?

கண்ணகியிடம் அக்னிதேவன் "சிறந்த பத்தினி தெய்வமே! நினக்கு மிகவும் தவறு இழைத்த அந்நாளிலே, இந்நகரில் பரவி எரியூட்ட யானோர் ஏவலை முன்னரே பெற்றுள்ளேன்!" என்கிறது. அப்படி கண்ணகிக்கு இழைத்த தவறுதான் என்ன?

மதுராபதி தெய்வம்,"ஆடித்திங்களில் பேரிருளையுடைய கிருட்டிணப் பக்கத்து அட்டமியும், கார்த்திகையின் குறையும் சேர்ந்த வெள்ளிக்கிழமையன்று, ஒள்ளிய நெருப்பு உண்ண, புகழ் வாய்ந்த மதுரையுடன் அதனை ஆளும் மன்னனும் கேடு எய்துவான்!" என்ற சோதிடச் சொல் முன்னரே உள்ளது என்கிறது. இங்கு சோதிடச் சொல் பலிக்கும் என்பதை மதுராபதி வாயிலாக அறிவித்து, கண்ணகி மூலம் நிகழ்த்திக் காட்டச் செய்திருக்கும் இளங்கோவடிகள், ஏன் அதைத் தம் வாழ்வில் மட்டும் பொய்யாக்கிக் காட்டிவிட்டு, காப்பியத்தில் மட்டும் மெய்யாக்கிக் காட்டியதன் பின்னணி என்ன?

இங்கு கோவலன் கொல்லப்பட்டதன் முன்வினைக்காரணம் குறிப்பிடப்படுகிறது. பாண்டியன் இறப்பதற்கோ மதுரை அழிந்ததற்கோ முன்வினைக் காரணங்கள் எதுவும் சுட்டப்பெறுவதில்லை. ஆனால் அழியும் என்ற ஒரு உரை உண்டு என்பது மட்டுமே மதுராபதியால் சுட்டப்பெறுகின்றது. இது மதுரையை அழித்ததற்கு காரணம் ஏதேனும் கூற வேண்டுமே என்பது போல அமைந்துள்ளது. அதே போல முற்பிறப்பு வரலாறுகளில் பெண் எவ்வித தவறும் இழைக்காதவளாயினும், இப்பிறப்பில் தண்டனை அனுபவிப்பதற்கு அவளின் முற்பிறப்பு காரணம் ஆகாது போலும். தண்டனை அனுபவிப்பதற்குக் காரணமே இல்லையாயினும் அவளுக்கு தண்டனை மட்டும் நிரந்தரமாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டே இருப்பது மட்டும் எதனால்? மேலும் இறந்தவர்கள் மட்டுமே விண்ணுலகம் செல்ல முடியும் என்றிருக்கும் போது, கண்ணகி மட்டும் மனித உருவில் சென்றது எவ்வாறு?

இது இவ்வாறிருக்க கண்ணகி மதுரையை எரித்து விட்டு வஞ்சிக்கு வருகிறாள். அங்கு வேங்கை மர நிழலில் நிற்கும் கண்ணகியை, குன்றக்குற மகளிர், “எங்கள் குலதெய்வமான வள்ளிபோல் விளங்கும் நீங்கள் எம் உள்ளம் நடுங்கும் வண்ணம் ஒரு முலையிழந்து நிற்கின்றீர்! நீவீர்தாம் யாரோ? என வினவ, கண்ணகி நடந்த நிகழ்வுகளைக் கூற அவர்கள் அச்சமுற்று கைகுவித்து அவளை வணங்குகின்றனர். இங்கு அவள் கோவலனோடு விண்ணுலகம் செல்வதைக் கண்டுவிட்டு, “இவள் போலும் ஒரு பெரிய தெய்வம் நம் குலத்துக்கு வேறு இல்லை” என்கின்றனர்.

இவ்வாறு உடனுக்குடன் தன்னுடைய தெய்வத்தை மாற்றும் இயல்பினரா குன்றக்குறவர். “சிறுகுடியீரே! சிறுகுடியீரே! இக்கற்புடையாளைத் தெய்வமாக ஏற்றுக் கொள்ளுங்கள்!” என்பது யாரை நோக்கி? இவ்வாறு கூறுவது அல்லது கூறச் செய்வது எதனால்? கண்ணகியை நம் நாட்டிற்குரியவளாக்கி, அவளுக்குக் கோவில் எடுத்து, சேரர் புகழடைய வேண்டும் என்ற எண்ணத்தினாலேயாகும். எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து, எங்கோ கொடுமைக்காட்பட்டு தன் கணவனை இழந்து, தம் நாடடைந்த ஒரு பெண்ணை பத்தினிக் கடவுள் என்னும் நிலைக்கு உயர்த்தி, அவளுக்கு படிமம் சமைக்க இமையம் வரை சென்று கல் கொண்டு வர வேண்டிய தேவை என்ன? இது சேரனை உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்தினாலேயாகும். ஆயினும் இது எதை நோக்கி செயல்படுத்தப்பட்டிருந்தாலும் பெண்ணை என்றும் சாதாரணமானவளாக நினைக்கக் கூடாது என்பதும், அவளால் அன்பிற்கு அடிபணியவும், அதிகாரத்திற்கு எதிராகக் குரல் கொடுத்து அதை அழிக்கவும் இயலும் என்பதை, சமுதாயத்திற்கு இப்'படிமம்' என்றும் நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும். எது எவ்வாறாயினும்,

”நூலின் பிற்பகுதியில் கண்ணகி ஒரு மீறலின் பிரதிநிதியாகவும், தீவிரச்செயலின் பிரதிநிதியாகவும் விளங்குகிறாள். அவள் செயல் ஒரு சுத்தீகரிக்கும் வன்முறைச்செயலாகும். கண்ணகியின் வன்முறை, அரசும் சமுதாயமும் நடத்தும் அமைப்பு ரீதியான வன்முறைகளைப் பற்றிச் சிந்திக்கச் செய்கிறது”

(nmuththumohan.wordpress.com) என்கிற ந,முத்துமோகன் கருத்தும் சிந்தித்தற்குரியது. இவை அனைத்தையும் விடுத்து கண்ணகியை தெய்வமாகப் பார்க்கும் இளங்கோவின் பாத்திரங்களும், இது போன்ற பிறரும் இளங்கோவின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் கருத்துப் பாத்திரங்களே.

**மணிமேகலையின் மீவியல்பு அடிப்படை**

மணிமேகலையில் தோன்றும் சில எல்லை மீறிய சக்திகள் மணிமேகலையின் இறப்பு, நிகழ்வு, எதிர்கால நிகழ்வுகளைத் தெளிவுபடுத்தி வழி நடத்திச் செல்கின்றன. அந்தவகையில் மணிமேகலையின் பாத்திர உருவாக்கம் என்பது தொடக்கம் முதல் இறுதிவரை எல்லை மீறிய சக்திகளாலும், நிகழ்ச்சிகளாலுமே கட்டமைக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் என்ன? சமயத் தத்துவங்களின் உள்ளாற்றலை நவிற்சிப்படுத்திக் காட்டுவதில் போதனைகளே முக்கியத்துவம் பெற்று முன் நிற்கின்றன. இதனை,

“சமயம் என்று நிறுவனமாகின்றதோ அன்றே மந்திர மாயங்களும் இடம்பெற்றே தீரும். அந்த நிலையில் மக்கள் அற்புத நிகழ்ச்சிகளை நம்புவர்; போற்றுவர்”

(சிலப்பதிகாரச் செய்தி, ப.71)

என்ற ஒரு தன்மையே சிலப்பதிகாரத்தில் தொடங்கி, மணிமேகலையில் கால்கொண்டு பக்தி இலக்கியம் வரை தொடர்ந்து நிலைநின்றதற்குக் காரணமாக அமைகின்றது எனலாம். அந்தவகையில் மணிமேகலை பௌத்த அறத்தினை பரப்புதற்குரிய தகுதிகளை தெய்வீக ஆற்றல்களால் பெற்றதனையும், அதனை பல்வேறு வழிகளில் செயல்படுத்தி பௌத்த அறத்தினை நிலைநாட்டியதையுமே இது விவரிக்கின்றது. மணிமேகலையில் போதனைகளைப் போன்றே இயற்கை இறந்த நிகழ்வுகளும் கணக்கிடற்கரிய அளவில் குவிந்து காணப்படுகின்றன. அதில் மணிமேகலையின் பாத்திர உருவாக்கத்திற்குத் துணை நின்ற ஒரு சில விஷயங்களே இங்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**மணிமேகலை துறவியாக்கப்படுதலின் பின்னணி**

சிலப்பதிகாரத்தில் அடைக்கலக்காதையில் மாடலமறையோனிடம் கோவலன் தன் கனவு பற்றி கூறியதில் "மலரம்புகளை வெற்று நிலத்தில் வீசி மன்மதன் செயலற்று ஏங்குமாறு, அழகு விளங்கும் போதி மாதவனிடத்து மணிமேகலையை மாதவி அளித்தாள்" என்பதை மெய்ப்பிக்கும் வகையில் கோவலன் இறப்பிற்குப்பின் மாதவியும், மணிமேகலையும் துறவு மேற்கொள்ளுகின்றனர். இச்செய்தியை செங்குட்டுவனிடம் அடித்தோழி அரற்றிக் கூறுவதாக வாழ்த்துக்காதையில் இளங்கோ எடுத்துக்காட்டுகிறார். இவ்வாறு ஒன்றிற்கு இரண்டு முறை சிலம்பில் நினைவுபடுத்தப்பட்ட ஒரு விஷயத்தை தனக்குரிய கதைக் கருவாக சாத்தனார் எடுத்துக் கொள்கிறார். மணிமேகலையில் துயிலெழுப்பிய காதையில் மணிமேகலா தெய்வம் சுதமதியின் நேரில் தோன்றி மணிமேகலையின் துறவைப் பற்றித் தான் மாதவிக்கு அவள் தன் மகள் மணிமேகலைக்குத் தன் பெயர் சூட்டிய அன்றே கனவில் தோன்றி, "காமன் செயலற்று ஏங்கும் வண்ணம் ஆசையை முற்றக் கெடுக்கும் தவமாதைப் பெற்றாய்" என்று உரைத்ததாகக் கூறுகின்றது. இவ்வாறு கூறுவதினின்று சாத்தனார், சிலம்போடு தொடர்புபடுத்துகிறார். ஆகவே 'மணிமேகலைத் துறவு' என்பது சாத்தனார் புதிதாகத் தேர்ந்தெடுத்துக்கொண்ட ஒரு விஷயமல்ல. ஆனால் அதை மனம், கற்பனை, சூழல், சமயம் சார்ந்து நிகழ்த்திக்காட்டுதலில் இளங்கோவினின்றும் வேறுபட்டு விளங்குகிறார்.

**மணிமேகலையை அறச்செல்வியாக்குதலின் பின்னணி**

"ஒவ்வொரு காத்திரமான சமூக நெருக்கடியும் பலவகையான கனவு தேசங்களை உற்பத்தி செய்வதுண்டு. அத்தகைய கனவு தேசங்களிலிருந்தே எதார்த்தம் தனது பாதையை தேர்வு செய்து கொள்ளும். அந்தவகையில் மணிமேகலை அமுதசுரபியைப் பெற்று பசி நீக்கினாள் என்ற கதைக்கரு வணிகச் சமூகத்தின் மிகப்பெரிய நெருக்கடியிலிருந்து தோன்றிய அபூர்வமான கற்பனை அல்லது கனவு தேசம்"

(nmuththumohan.wordpress.com) என்று ந.முத்துமோகன் கூறும் கருத்து சிந்தித்தற்குரியது. இது வணிக சமூகங்களின் நெருக்கடிக்குப் பிறகு, வேளாண்மைச் சமூகத்தின் எழுச்சி குறித்த ஒன்றாகக் குறியீட்டுத்தன்மை பெறுகிறது. ஆகவே மணிமேகலை அமுதசுரபியைப் பெறவேண்டும் என்பதற்காக மணிமேகலா தெய்வம் அவளை மணிபல்லவத்தீவிற்கு ஆகாயம் வழியாக மயக்கி எடுத்துச் செல்லலும், அங்கு புத்தபீடிகை தோன்றலும், பீடிகை கண்டு பிறப்புணர்தலும் நிகழுகின்றது. காப்பியப்போக்கில் மணிமேகலா தெய்வம் மூலமும் மற்றும் கந்திற்பாவையின் மூலமும் தன் முற்பிறப்பு பற்றி அறிகிறாள். இத்தகைய முற்பிறவிச் சிந்தனை சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கால் தமிழகத்தில் பரவலானது என்பது நோக்குதற்குரியது. இதற்குக் காரணம் என்ன? நிகழும் மனிதப் பிறவியில் கூடுதலான அறப்பணிகளை மேற்கொண்டு, முற்றும் முழுதான அறச்சமுதாயத்தை மலரச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தினாலேயாகும். ஆனால் மணிமேகலையின் முற்பிறவிக் கதையில் வரும் இராகுலன், இலக்குமி ஆகியோர் அரசப் பரம்பரையினர். இதில் இராகுலன் செய்த தவற்றிற்காக அவன் மறு பிறவி கொள்கிறான். ஆனால் எவ்விதத் தவறும் செய்யாத இலக்குமியோ மறுபிறப்பு கொள்வதோடு, கணிகையின் மகளாகத் தோன்றச் செய்து அல்லல்படுத்துதலின் நோக்கம் என்ன? அவ்வாறாயின் பெண்ணின் இன்ப, துன்பங்களுக்கு கணவனே காரணம் எனில் பெண்ணை உயர்வுபடுத்துவது போன்ற பாவனை மட்டும் எதற்கு?

**சமுதாய கட்டமைப்பில் மணிமேகலை**

"சமுதாயம் தம்முள் அடங்கிய பெண்ணைத் தெய்வமாகவும் தம் எதிர்பார்ப்புகளினின்று விலகிய பெண்ணைப் பேயாகவும், பிடாரியாகவும் இனம் காண்கிறது"

(பெண்ணியச் சுவடுகள்-126)

என்ற அடிப்படையில் பார்க்கும் போது, 'மணிமேகலைத் துறவு' சமுதாயத்தை எதிர்த்து செய்யக்கூடிய புரட்சியே. கணிகையரை, சமூகத்தில் பாதிப்புக்குள்ளாகும் நிலையினின்றும் மீட்டெடுக்கக் கூடிய முயற்சியே இது எனலாம். இதை நேரடியாகவோ, அமைதியாகவோ சொன்னால் பழமையான நம்பிக்கை சார்ந்த பண்பாட்டு மரபுக்குள் ஊறிப்போன நம் சமுதாயம் ஏற்றுக்கொள்ளாது. ஆகவேதான் சமயம் சார்ந்த நம்பிக்கை கொண்டே அதை கட்டுடைக்க மேற்கொண்ட முயற்சியே மணிமேகலைக் காப்பியத்தில் மணிமேகலையாக உருப்பெறுகிறது. அது துறவி, அறச்செல்வி என்னும் பல பரிமாணங்களில் உலா வருகிறது. இதற்கு உதவும் வகையில் சில நம்பமுடியா விஷயங்களால் புனைந்துரைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆகவே மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்கு வேற்றுருகொள்வதற்கும், ஆகாயம் வழியே சஞ்சரிப்பதற்கும், பசியை தொலைத்தற்குமான மூன்று மந்திரங்களை உபதேசித்துச் செல்வதும், அதன் வாயிலாக அவள் ஆண் மற்றும் காயசண்டிகை வடிவம் கொள்வதும், சிறைக்கோட்டத்தில் அரசமாதேவியின் துன்புறுத்தல்களினின்று தப்பித்தற்காக சில மீவியல் செயல்பாடுகளை நிகழ்த்துவதும் , நெறி பரப்ப வான்வழியே செல்வதும் என்பது போன்ற சில நம்ப முடியா விஷயங்களால் மணிமேகலைப்பாத்திரம் உருக்கொண்டிருக்கிறது.

சிலப்பதிகாரத்தினின்று 'மணிமேகலைத் துறவு' ஒன்றனை மட்டுமே எடுத்துக்கொண்டு காப்பியம் படைத்த சாத்தனார் பௌத்த சமயத்தைத் தெரிவு செய்து கொண்டது எதனால்? காரணம்,சமணத்தை விட பௌத்தமே பெண்களுக்கு இடமளித்தது என்ற தகவல் நூலிலேயே கூறப்பட்டிருப்பதால், இந்த ஒரு காரணத்திற்காகக் கூட இவர் இச்சமயத்தைத் தெரிவு செய்து கொண்டு, தம் குறிக்கோளை இதன் மூலம் நிறைவேற்ற முடியும் எனத் துணிந்திருக்கலாம்.

இவ்விஷயத்துக்கு மயிலை சீனி வேங்கடசாமி கூறும் கருத்தை எடுத்துக் கொள்வோம். என்னவென்றால்,

"இந்த மதம் மேல்சாதி, கீழ்சாதி என்ற பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டாதபடியினாலும், எக்குடியிற் பிறந்தோராயினும் அன்னவர் கல்வி அறிவிற் சிறந்தோராய்த் தம் மதக் கொள்கைப்படி ஒழுகுவாராயின், அவரையுந் தங்குருவாகக் கொள்ளும் விரிந்த மனப்பான்மை கொண்டிருந்தபடியினாலும், அக்காலத்தில் சாதி பாகுபாடற்றிருந்த தமிழர் இந்த மதத்தை மேற்கொண்டனர் என்றும் தோன்றுகின்றது"

(பௌத்தமும் தமிழும், ப-31)

என்ற கருத்தும் ஏற்புடையதாகவே அமைந்துள்ளது. மட்டுமல்ல,

"இயற்கை இறந்த நிகழ்ச்சி என்பது தத்துவத்திலிருந்து பிரியாத ஒரு புறவடிவமாகக் செயல்படுகிறது"

(தமிழில் காப்பியக் கொள்கை, ப.164) என்றும்,

"புத்த தத்துவ வரலாற்றிற்கு இவ்வற்புதங்கள் மிக முக்கியமானவை; எனவேதான் இவை ஏராளமாக இடம்பெற்றுள்ளன"

(மேலது,ப.164) என்றும் சொல்லப்படுவன போன்ற கருத்தியல்கள் சிந்தித்தற்குரியன.

**நிறைவாக**

சமுதாயத்தில் சீர்கேடு நிகழும் போது அங்கு சீர்திருத்தம் என்பது முக்கியமானதாகிறது. அந்தவகையில் சமுதாயத்தைச் சீர்திருத்த மணிமேகலைத் துறவு என்பதும், பத்தினி வழிபாடு என்பதும் முக்கியமான ஒன்றாகி விடுகின்றன. அதுவும் அச்சீர்திருத்தமுறை என்பது அந்தந்த சமயம் சார்ந்ததாகவும் மாறி விடுகிறது. அந்தவகையில் சீர்திருத்தக் கருத்துக்கள் சமயம் சார்ந்து, அதன் உள்ளீடாக புராண மரபுக்கதைகளையும், புகழ்மரபுக்கதைகளையும் கொண்டு வெளிக்காட்டப்படுகிறது. அது எந்த இடத்தில் எம்முறையில் என்பதே இரட்டைக்காப்பியங்களில் மறச்செல்வியாகவும், அறச்செல்வியாகவும் உருமாறி வெளிவந்துள்ளது. இதை நிகழ்த்திக்காட்டத்

துணை நின்ற இயற்கை இறந்த நிகழ்வுகள் இல்லையெனில் இரட்டைக்காப்பியங்களின் உருவமும் உள்ளடக்கமும் இல்லையென்றே சொல்லலாம். அந்த அளவிற்கு இயற்கை இறந்த நிகழ்வுகள் இரட்டைக் காப்பியங்களில் முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கின்றன.

**துணை நின்ற நூற்கள்**


1. ஆய்வுக்கோவை, தொகுதி-1, ஏழாவது கருத்தரங்கு, 1975.
2. இளங்கோவடிகள் யார்?, ரகுநாதன், மீனாட்சி புத்தக நிலையம், 1984.
3. சிலப்பதிகாரச் செய்தி, ம.ரா.போ. குருசாமி, மல்லிகா வெளியீடு, 1967.
4. சிலப்பதிகாரம் மூலமும் தெளிவுரையும், ஜெ. ஸ்ரீசந்திரன், வர்த்தமானன் பதிப்பகம், 2001.
5. தமிழில் காப்பியக் கொள்கை, முதற்பகுதி, து.சீனிச்சாமி, தஞ்சாவூர் பல்கலைக்கழகம், 1985.
6. திருக்குறள், சாரதா பதிப்பகம், 2006.
7. பெண்ணியச் சுவடுகள், முனைவர் வாசுகி ஜெயரத்னம், அறிவுப்பதிப்பகம், 2009.
8. பௌத்தமும் தமிழும், மயிலை சீனி. வேங்கடசாமி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1972.
9. மணிமேகலை, உ.வே.சா பதிப்பு, 2008.
10. www.srmuniv.ac.in
11. nmuththumohan.wordpress.com
12. Paalveli-athirvagal.blogspot.com/2011/08/blog-spot

**Book Editors: M.Maridass and G.Raju. தமிழ் மற்றும் அறிவியல் படைப்புகள் 2015, Published by Gayathri Publishers,Tirunelveli,Tamil Nadu,India dated on 15,December,2015.**

**ISBN :978-81-931923-8-2**

---

# நீதி நூல்களில் கல்வி

## ப. சீனிவாசன்

தமிழ் துறை, பெஸ்ட் கல்வியல் கல்லூரி, மலியம், மயிலாடுதுறை, தமிழ்நாடு, இந்தியா, பின்கோடு

**மின்னஞ்சல்: sribalu1986@gmail.com**

**முன்னுரை**

தனி மனித வாழ்வையும், நாட்டின் வளர்ச்சியையும் வளத்தையும் உயர்த்துவது கல்வி. மனிதனை பிற வளத்தையும் உயர்த்துவது கல்வி. மனிதனை பிற உயிரினங்களோடு வேறுபடுத்திக் காட்டுவது கல்வி. கல்வியானது தன்னுடைய மதிப்பாலும் கொள்கையாலும், செயல்முறையாலும் மனித வளர்ச்சியினை திருத்தி அமைக்கின்றது. எதிர்கால வாழ்வின் குறிக்கோளை அடையவும் வழிவகை செய்கின்றது. “கல்வி ஒன்றே அழியாச் செல்வம்” என்பது சான்றோர்கள் கூற்று. இத்தகைய கருத்துக்களை பதினென் கீழ்கணக்கு நூல்களில் அமைந்துள்ள நீதி நூல்களின் வழி காண்பதே இக்-கட்டுரைஆகும்.

I.**நீதி நூல்கள்**: (பதிணென் கீழ்கணக்கு)

1. **திருக்குறள்**:

வள்ளுவர் கல்வியின் சிறப்பு, கல்லாதார் நிலை பற்றி பொருட்பாலில் கல்வி என்னும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். மனிதன் எண்ணும், எழுத்தையும் தம் இரு கண்களாக பாவித்தனர் என்பதனை.

**“எண்ணென்ப ஏனை எழுத்தென்று இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு” (குறள் - 392)**

என விளக்குகிறார். மேலும் மனிதனின் முயற்சியால் பெற்ற கல்வி பல பிறவிகளுக்கும் வந்து உதவும், கற்றோர்க்கு இருப்பதே கண் மற்றவர்களுக்கு இருப்பது புண் என்பதனை பின் வரும் குறள்களின் வழி விளக்குகிறார்.

**“ஒருமைக்கண் தான் கற்றகல்விஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்புஉடைத்து” (குறள் - 398)**
**“கண்ணுடையோர் என்போர் கற்றோர் முகத்து இரண்டு**
**புண்ணுடையோர் உடையார் கல்லாதவர்” (குறள் - 393)**

இவ்வாறு கல்வி பற்றி விளக்கிய வள்ளுவர்

**“கல்லாதான் - சொல்காமுறுமுதல் முலையிரண்டும்**
**இல்லாதான் பெண்காமுற் றற்று” (குறள் - 402)**

**பொருள்:**

கல்லாதவன் சொல் கேட்க விரும்புவது என்பது இரு மார்பகம் இல்லா பெண்ணுடன் மையல் கொள்வதற்கு சமம்.

**“நல்லார்கண் பட்டவறுமையின் இன்னாதே**
**கல்லார்கண் பட்டதிரு. (குறள் - 408)**

**பொருள்:**

கல்லாதவரிடம் உள்ள செல்வம் கற்றறிந்தோரின் வறுமையை விட மோசமானது. (குறள் -)

**“விலங்கோடு மக்கள் அனையர் இலங்கோல்**
**கற்றாரோடு ஏனை யவர்” (குறள் 410)**

**பொருள்:**

கல்லாதவர்களுக்கும் கற்றவர்களும் உள்ள வேற்றுமை என்பது விலங்குகளும் மனிதர்களுக்கும் உள்ள வேற்றுமை போல என கல்லாதார் நிலையையும் விளக்குகிறார்.

**2. நாலடியார்:**

**“நெஞ்சத்து நல்லம்யாம் என்றும் நடுநிலமையால்**
**கல்வி அழகே அழகு” (நாலடி– 131)**

**பொருள்:**

அதாவது ஒரு பெண் மஞ்சள் பூசுவதும், அவள் முந்தானையில் உள்ள கரையிட்ட அழகும். தலை மயிரை சீர்படுத்தும் அழகும் அழகல்ல. ஒழுக்க வாழ்வை தரும் கல்வியே அழகு.

**“என்மையுலகத்தும் யாம்காணோம் கல்விபோல்**
**மம்மர் அறுக்கும் மருந்து” (நாலடி– 132)**

**பொருள் :**

கல்வி இவ்வுலக இன்பத்தை தரும் ; பிறர்க்கு கொடுத்தால் குறையாது, புகழை பரவச் செய்யும், உயிர் இருக்கும் வரை அழியாது. அதனால் கல்வியைப் போன்று அறியாமை போக்கும் மருந்து உலகின் இல்லை.

**“கல்வி கலையில் கற்பவர் நாள் சில” (நாலடி– 135)**

**பொருள் :**

கல்வி முடிவில்லாதது ஆனால் அதனை கற்பவர் வாழ்நாள் எண் குறைவு, எனவே அறிவுடையோர் அன்னப்பறவையால் நீரை பிரித்தறிவது போல் நூல் தன்மையை அறிந்துகற் நல்ல நூல்களையே கற்பர்.

**3. நாண்மணிக்கடிகை:-**

- “தனக்குபாழ் கற்றறிவில்லாஉடம்பு”(நாண்மணிக்கடிகை– 22)
- “கற்றலின் வாய்ந்தபிறப்பில்லை” (நாண்மணிக்கடிகை– 31)
- “கல்லாதுமுத்தானைக் கைவிட்டுக் கற்றவன் இளமைபாராட்டும் உலகு” (நாண்மணிக்கடிகை– 63)
- “கற்றவரிடம் கழிவிரக்கம் இல்லை” (நாண்மணிக்கடிகை– 10)
- “கற்றான் தளரின் எழுந்திருக்கும்” (நாண்மணிக்கடிகை– 74)
- “கல்லாமைகுலனையும் குடியையும் கொல்லும்” (நாண்மணிக்கடிகை - 7)
- “கல்லாஒருவனுக்குஅவன் சொல்லே கூற்று” (நாண்மணிக்கடிகை– 84)

என்றுகுறிப்பிடுகிறது.

**4. இனியவைநாற்பது:**

**“பிச்சைபுகினும் கற்றல் இனிதே” (இனியவைநாற்பது– 1)**

**பொருள்:**

பிச்சை எடுத்தாவது கல்வியை கற்க வேண்டும்.

"பற்பல நாளுக்கு உதவும் நல்ல நூல்களை கற்பது இனிது."
ஏன கல்வி பற்றி விளக்குகிறது.

**5. திரிகடுகம்:**

- "கல்லாதவர்க்கு இனமாய் இருத்தல் அறியாமை" (திரிகடுகம் - 1)
- "ஆசிரியர் இல்லாதஊரால் நன்மை இல்லை" (திரிகடுகம் - 10)
- "நல்ல மாணவன் கேட்டதை மறுத்தல் கூடாது. (திரிகடுகம் - 12)
- ஏன திரிகடுகம் கல்வி பற்றி விளக்கம் அளிக்கின்றது.

**6. பழமொழிநானூறு :**

- இளமையில் கல்லாதவனால் மூப்பில் கற்க முடியுமா (பழமொழி– 1)
- கற்றோர்க்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு அதனால் கட்டுசோறு தேவையில்லை" (பழமொழி– 4)
- "புலமை மிக்கவரை சரியாக கற்றோரே அறிவர்" (பழமொழி -5 )

ஏன பழமொழி வாயிலாக கல்வி பற்றி விளக்குகிறது.

**7. சிறுபஞ்ச மூலம் :**

நூல், அரசன், ஆசிரியர், தாய், தந்தை என்றும் ஐவரையும் "ஐங்குரவர்" என பாராட்டும் சிறுபஞ்சமூலம் மாணக்கர்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதையும் விளக்குகிறது.

**"நின்றக்கால் நிற்க அடக்கா லென்றும்
இருந்தக்கால் ஏவாமை ஏகார் - பெருந்தக்கார்
சொல்லிற் செவிகொடுத்துக் கேட்டீகமிட்டும்
வினாவற்கசொல் லொழிந்தக் கால்" (சிறுபஞ்ச மூலம் - 74)**

**முடிவுரை:**

மேற்காட்டிய சான்றுகள் மூலம் கல்வியின் பெருமை கற்றவரின் இயல்பு, கற்றார் ஒழுக வேண்டிய முறை ஆகியவை பற்றி தெளிந்து அறிவுடையோராக சங்காலத்தில் வாழ்ந்தவர்கள் விளங்கினர் என்பது நீதிநூல்கள் வெளிப்படையாக அறியமுடிகிறது.

**Book Editors: M.Maridass and G.Raju. தமிழ் மற்றும் அறிவியல் படைப்புகள் 2015, Published by Gayathri Publishers,Tirunelveli,Tamil Nadu,India dated on 15,December,2015.**

**ISBN :978-81-931923-8-2**

# மணிமேகலையில் மணிமேகலையின் துறவு ஒரு கண்ணோட்டம்

**ர.ரதி**
**முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**தமிழ்த்துறை&ஆய்வு மையம்,**
**அரசுக்கல்லூரி சித்தூர்,**
**பாலக்காடு, கேரளம்.**
**மின்னஞ்சல்:** rathi.r1988@gmail.com

மணிமேகலை காப்பியத்தில் குறிப்பிடப்படும் பெண் துறவுகள் மிகுதியும் சந்தர்ப்ப சூழல் சார்ந்தே நிகழுகின்றன. அதில் மணிமேகலை சந்தர்ப்ப சூழ்நிலையால், துறவு மேற்கொண்டாக வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டாலும், அவள் அதனை முற்று முழுதாக உணர்ந்து, அறவண அடிகளிடம் தீட்சை பெற்ற பின்னர், இறுதிக் காதையான பவத்திறமறுகெனப் பாவை நோற்ற காதையிலேயே துறவியாகின்றாள். ஆகவே மணிமேகலையில் மணிமேகலைக்கு தொடக்கம் முதல் துறவு சார்ந்து சொல்லப்பட்டு வந்த விஷயங்கள் அனைத்தும் துறவிற்குள் அவளை செலுத்துவதற்குச் சொல்லப்பட்டு வந்த ஆயத்த நிலைபாடுகளே என்பதைப் புரிந்து கொள்ள இக்கட்டுரை வழிகாட்டும். மேலும் துறவியாதலுக்குள்ள அவளின் ஆயத்த நிலைபாடுகளில் பசியொழிப்பு, பரத்தையொழிப்பு, சாதியொழிப்பு, சிறையொழிப்பு, மதுவொழிப்பு என்பதான செயல்பாடுகள், அவள் வாயிலாகவே நிகழ்த்தப்படுகின்றன. இவை யாவற்றையும் மேற்கொண்டு அறத்தொண்டாற்றி, இறுதியில் துறவியாகின்றாள் என்பதே மணிமேகலைத் துறவின் உண்மையான நிலைபாடு. ஆனால் சிலப்பதிகாரத்தோடு தொடர்பு படுத்தி, மணிமேகலையை ஆரம்பம் முதல் ஒரு துறவியாகவே காணும் கண்ணோட்டம் தவறானது என்பதனையும் எடுத்துக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**துறவும் துறவின் நிலைகளும்**

துறவு என்பது எதிலும் பற்றற்ற நிலை அல்லது எல்லாவற்றையும் துறந்த நிலை என்று குறிப்பிடப்படுகிறது. அவ்வாறாயின் துறத்தல் என்பதை ஒருவர் இவ்வுலகின் அனைத்தினின்றும் தன்னை விடுவித்துக் கொண்டு ஆன்ம நிலையில் சுதந்திரமாக இருத்தல் என்று வரையறை செய்து கொள்ளலாம். சிலர் வாழ்வை வெறுத்ததனால் துறவு

மேற்கொள்கின்றனர். சிலர் துறவின் வழி தன்னைக் காத்துக் கொள்வதற்காக துறவு மேற்கொள்கின்றனர். சிலர் முதுமையில் துறந்தே ஆக வேண்டும் என்று நியதி இருக்கின்றதே என்ற கடமைக்காகத் துறக்கின்றனர். இவ்வாறு பற்பல காரணங்களாலும், சந்தர்ப்ப சூழல்களாலும் துறத்தல் என்பது துறவாகாது. ஆயினும் துறவு என்பது ஏதோ ஒரு காரணம் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது. ஆகவேதான் லக்கானியம்,

“துறவு என்பது ஒரு விதத்தில் வேட்கையே” (raviaaivu.blogspot.com)

என்று குறிப்பிடுகின்றது. பொதுவாக துறவிற்கு பற்பல காரணங்கள் கூறப்படினும், எதிலும் அளவு முறை, அனுபவிக்கக் கூடிய முறை ஆகியவற்றை அறிந்து ஒழுகும் போது துறவு என்பது தானே அமைந்துவிடும். காரணம் ‘துறவு’ என்பது ஒரு அறமாகவே வலியுறுத்தப்படுகிறது. அதுவும், சமுதாயத்துக்கோ அல்லது பிறருக்கோ பயன்படும் போதே அது அறமாக மதிக்கப்பெறுகிறது. அதை விடுத்து காட்டில் சென்று தவம் மேற்கொள்வதனாலேயோ அல்லது அனுதினமும் இறைவனை நினைத்துக் கொண்டிருப்பதனாலேயோ எவ்வித பயனும் நிகழ்ந்து விடப் போவதில்லை. இவ்வாறிருக்கையில் மணிமேகலையில், மணிமேகலையின் துறவு குறித்தான நிலைபாடுகள் எவ்வாறு பார்க்கப்பட்டிருக்கிறது? அதை எவ்வாறு பார்க்க வேண்டும் என்பதான கருத்தியல் நிலைகளை முன்வைத்து இக்கட்டுரைக்குள் செல்லலாம்.

**இளமைத் துறவு**

துறவு என்பதே ஒரு கடினமான செயல். அதிலும் இளமைத் துறவு என்பது மிகவும் கடினமானதும், செயற்கரியதுமான செயலுமாகும். அவ்வாறிருந்தும் மணிமேகலை இளமையில் துறவு மேற்கொள்ளக் காரணம் என்னவாக இருக்கும்? அதற்குக் காரணம், துறவின் கடுமையை விட அவளுக்கு சமுதாயத்தில் கணிகை குல மாது என்று அடையாளம் தாங்கி வாழ்தல் என்பதும், கோவலன் இறப்பினால் மணிமேகலையும், அவள் தாயும் ஊரார் பழிக்கு ஆளான காரணத்தினாலும், அத்தகைய சமுதாயத்தில் இனியும் நிலைபெற்று வாழ்தல் என்பதும் கொடுமையிலும் கொடுமையாகவே இருந்திருக்கும். ஆகவே அத்தகைய கொடுமையினும் இந்த கடுமை தன்னை என்ன செய்து விடப் போகிறது என்ற எண்ணத்தின் நகர்வாகக் கூட இருக்கலாம்.

இளமையில் துறவு மேற்கொள்வதற்கு மணிமேகலை முன் பற்பல காரணங்கள் காணப்படினும், உணர்ந்தறியாத இளமைத் துறவில் சில குறைபாடுகள் என்பதும் தவிர்க்க இயலாத ஒன்றாகவே அமைந்துவிடுகின்றன. ஆகவேதான்,

”துறவு வாழ்க்கையைத் தானே மேற்கொண்ட போது ஒருவர் காதலில் புக விரும்புவதில்லை. இளமையில் துறவு திணிக்கப்பட்ட போது, இளமைக்காதல் அவ்வப்போது தலைகாட்டுவதும் நேரிடுகிறது”

(http://www.dinamani.com/weekly-mani/article656758.ece?service=print))

என்ற சரளா இராசகோபாலன் அவர்களின் கருத்து சிந்தித்தற்குரியது. இதை மணிமேகலையின் வாழ்வியல் மிகத் தெளிவாக உணர்த்துகின்றது.

- உதயகுமரனனின் வரவு கண்டு மணிமேகலை சுதமதியிடம்,
  “றென்மேல் வைத்த வுள்ளத்தான்” (4:80)

என்று கூறுமிடத்திலும்,

- ”இகழ்ந்தானாகி நயந்தான் என்னாது

புதுவோன் பின்றைப் போனதென் நெஞ்சம்” (5:86-88)

என்று தன் உள்ளத்தியல்பை வெளிக்காட்டுமிடத்திலும்,

- இதை நிரூபிக்கும் முகமாக மணிமேகலா தெய்வம்,

”ஆங்கவன் அன்றியும்அவன்பால் உள்ளம்
நீங்காத்தன்மை நினக்கு முண்டாகலின்” (10:44-45)

என்று கூறுமிடத்திலும்,

➢ உதயகுமரன் மணிமேகலையிடம் தவத்திற்குக் காரணம் கேட்கும் போது,
"என்னமர் காதலன் இராகுலன்"
என நினைந்து அவன் அடியை வணங்குமிடத்திலும் மணிமேகலையின் மனநிலை என்ன? என்பது தெளிவாக வெளிப்படுகின்றது. இங்கு மணிமேகலைத் துறவு என்பது மணிமேகலை என்ற பெண்ணின் மேல் திணிக்கப்பட்ட ஒன்று என்பதைத் தெள்ளத் தெளிவாக விளங்கிக் கொள்ள இயலுகின்றது. ஆயினும் இத்தகைய கட்டாயமான ஒரு நிலையை அதாவது பௌத்த சமயத் துறவி என்ற அடையாளத்தை, மணிமேகலையின் மேல் ஏற்றி சாத்தனார் கூற விளைவதற்கான காரணம்தான் என்ன? என்று பார்க்கும் போது,

"சமயத் துயரங்கள் என்பவை சமூகத் துயரங்கள்; அவை சமூகத் துயரங்களுக்கான எதிர்ப்பும் கூட"

(https://nmuthumohan.wordpress.com)

என்ற மார்க்ஸின் கருத்தை இவ்விடத்தில் நினைத்துப் பார்க்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.

இவ்விடத்தில் சங்க இலக்கியத்தின் அகம்,புறம் என்ற வகைப்பாட்டு நிலை, காப்பிய இலக்கியத்தில் சற்று மாற்றத்தை உள்வாங்கிய நிலையைக் காண இயலுகின்றது. இவ்விடத்தில் பெண்ணின் அகம் என்ற குடும்ப அமைப்பின் கட்டுப்பாட்டு நிலையை மணிமேகலைக் காப்பியம், 'துறவு' என்ற கருத்தாக்கத்தால் கட்டுடைத்திருக்கிறது என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

அதாவது பெண்ணை 'குடும்பம்' என்ற குறுகிய வட்டத்தினின்று 'துறவு' என்ற விரிந்த வெளிக்கு அழைத்து வந்திருக்கிறது எனலாம். இதன் மூலமாக மனிதர்கள் தங்களை தனியர்களாக்கும் நிறுவன அமைப்பினின்று விடுபட்டு "சங்கம்" என்ற பொதுமையில் ஒன்று கலக்க வேண்டும் என்பதையே மணிமேகலை வாயிலாக பௌத்தம் உணர்த்துகிறது. மட்டுமல்ல கணிகை குல மாதைத் துறவியாக்கியதும் கூட அக்காலச் சமூக நெருக்கடியையே காட்டுகிறது.

காரணம் சாதாரண நிலையில் வாழ வேண்டும் என்ற விருப்பம் மணிமேகலைக்கு இருந்தும், அவளை அக வாழ்விற்குள் செல்லாமல் தடுத்தது எது? கோவலனின் கனவா? மாதவியின் எண்ணமா? இல்லை மணிமேகலா தெய்வமா? இவை யாவுமே அல்ல. அக்காலத்தில் நிலவிய சமுதாய அமைப்பே காரணம். ஆயின் மேற்கூறிய கர்த்தாக்களின் வேலை என்ன? என்ற ஐயம் எழும். அவர்களைச் சாத்தனார், மணிமேகலையைத் துறவியாக்குதற்கு ஒரு கருவி போன்றே படைத்தளித்திருக்கிறார். இக்கண்ணோட்டத்தில் நோக்கும் போது சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையையும் இணைத்து நோக்குவோருக்கு மணிமேகலையை துறவியாக்குதற்காகவே கூட சிலப்பதிகார கதை நடந்தது போன்ற எண்ணம் எழும். ஆனால் வஞ்சிக்காண்டத்தில், நீர்ப்படைக் காதையில்,

"நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேன்
மணிமே கலையை வாந்துயர் உறுக்கும்
கணிகையர் கோலம் காணாதொழிகெனக்" (சிலப்பதிகாரம், 27:104-106)

மாதவி கூறி, புண்ணியம் தரும் தானம் புரிந்து துறவறத்தை மேற்கொண்டாள் என மாடலன் சேரன் செங்குட்டுவனிடம் கூறுகிறான். இங்கு மாதவி துறவு மேற்கொண்டது வெளிப்படையாகக் காட்டப்படுகின்றது. ஆனால் மணிமேகலை துறவு மேற்கொண்டதற்கான எவ்வித பதிவும் இல்லை. ஆனால் இவ்விடத்தை பற்றிக் கொண்டு சாத்தனார் தனது கதைத் தளத்தை, சமுதாய அமைப்புக்கேற்றாற் போன்று நகர்த்தியிருக்கிறார்.

ஆகவேதான் உதயகுமரன், மணிமேகலையின் பின் தொடர்வதை சுதமதி, மணிமேகலா தெய்வம் என பல வாயிகளினூடாகத் தடுக்கிறார் சாத்தனார். காரணம்,

"மையல் என்பது கணிகை மீது கொண்ட காம மயக்கமாகவே உள்ளது. இந்த மயக்கத்தை உடையவனோடு மணிமேகலை கற்புடைப் பெண்ணாக வாழ முடியாது. அரசனுக்கு ஆட்பட்டவள் பின்னாளில் அனைத்துத் தரப்பினரின் இச்சைக்கும் ஆட்பட வேண்டிய அபாயமும் உள்ளது. இந்நிலையில் மணிமேகலை என்ற பாத்திரத்தை பலர் காணவும் ஆடச் செய்யவும் முடியாமல், கற்புடைப் பெண்ணாக குடும்ப நிலைக்கு இட்டுச் செல்லவும் முடியாமல் இருக்கும் சூழலில் மணிமேகலையைத் துறவியாக்குவதே சரி என்று மாதவியோ அல்லது சாத்தனாரோ முடிவு கொள்கின்றனர்"

(puthu.thinnai,com)

ஆயினும் இல்லறத்தில் செய்யும் அறமே மேலானது என அனைத்து இலக்கியங்களும், சாதாரண நிலையில் நிலவும் அனைத்து கருத்தியல் வாதங்களும் குறிப்பிடும் போது, துறவறத்தின் மூலம் அறச்செயல்பாட்டை சாத்தனார் நிகழ்த்திக் காட்டக் காரணம் என்ன?

மணிமேகலை இல்லறத்தில் சிறந்தவளாக விளங்கினாலும் சமுதாயம் அவளை பழி தூற்றாமல் இருக்காது. மணிமேகலை கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தில், உதயகுமரன் உள்ளத்தினின்றும் வெளிப்படும் வார்த்தைகளை, காதல் மயக்கத்தில் மணிமேகலை பொருட்படுத்தவில்லையாயினும், அது பின்னாளில் என்றுமே ஒத்து வராது என்பதை சாத்தனார் ஆழ்ந்து சிந்தித்தவர் என்பதை 'மணிமேகலைத் துறவு' என்னும் அவரது முடிவே காண்பிக்கிறது. ஆகவே அறமும் அதன் வழியிலேயே செயல்படுத்தப்படுகிறது.

**பெண்துறவில் பௌத்தத்தின் இடம்**

"எக்குடியிற் பிறந்தோராயினும் அன்னவர் கல்வி அறிவிற் சிறந்தோராய்த் தம் மதக் கொள்கைப்படி ஒழுகுவாராயின், அவரையுந் தங்குருவாகக் கொள்ளும் விரிந்த மனப்பான்மை கொண்டிருந்தபடியினாலும், அக்காலத்தில் சாதி பாகுபாடற்றிருந்த தமிழர் இந்த மதத்தை மேற்கொண்டனர் என்றும் தோன்றுகின்றது"

(பௌத்தமும் தமிழும், ப-31)

என்ற கருத்தாக்கமும்,

"புத்தர் தன்னை நாடிவரும் மக்கள் அனைவரையும் சமமாக பாவித்தார். புத்தரின் இந்தக்குணம்தான் மற்ற துறவிகளிடமிருந்து வேறுபடுத்திக்காட்டியது"

(https://plus.google.com)

என்ற கருத்தாக்கமும் எதைக் காட்டுகிறது?

"இந்தத் தனி ஆறுகள் ஒவ்வொன்றும் கடலில் கலந்து ஒன்றாவது போல, பௌத்த சங்கத்தில் சேர்பவர்கள் தங்கள் சாதி, அந்தஸ்து, பிறப்பு ஆகியவற்றைக் கைவிட்டு அனைவருமே சக துறவிகளாக மாறுகின்றனர்." என்று புத்தர் கூறிய ஒருமைப்பாடுடைய நிலையையே காட்டுகிறது.

ஆகவேதான் ஆண், பெண், உயர்வு, தாழ்வு ஆகியவற்றையும் தாண்டி அனைவரையும் ஏற்றுக் கொண்டதனால்தான், கணிகைக் குல மாதைத் துறவியாக்குதற்கு சாத்தனார் இச்சமயத்தைத் தெரிவு செய்து கொண்டிருக்கிறார். மேலும் பெண்துறவைப் பற்றி சிலப்பதிகாரம், சமணம் சார்ந்து முதன்முதலாகப் பேசியது என்றாலும் கூட, பௌத்தமே பெண் துறவிற்கு அதிகப்படியான இடம் கொடுத்திருக்கிறது. அதன் வெளிப்பாட்டு நிலையை மணிமேகலை, மாதவி, சுதமதி, இராசமாதேவி என மணிமேகலையில் பெண்களின் துறவுப் பட்டியல் நீளுவதினின்று அறிய இயலுகின்றது.

**மணிமேகலைத் துறவு**

இந்திர விழாவில் ஆடுதற்பொருட்டு அழைக்க வந்த சித்திராபதியிடம் மாதவி, "மணிமேகலை தவவழியிற் செல்லுதற்கு உரியவளேயன்றி, மிகவுமிழிந்த பரத்தமைத் தொழிலுக்கு உரியவளல்லள்" என்று கூறுவதினின்று மணிமேகலை இன்னும் துறவு மேற்கொள்ளவில்லை என்பதை மணிமேகலை காப்பியம் ஊரலருரைத்த காதை வாயிலாக உறுதி செய்து கொள்ள இயலுகின்றது. ஆனால் கோவலன் இறந்ததும் மாதவியும், மணிமேகலையும் துறவு மேற்கொண்டதாக சிலப்பதிகாரம் வாழ்த்துக் காதையில் அடித்தோழி செங்குட்டுவனிடம் பத்தினிக் கோட்டத்தில் அரற்றுகின்றாள். இதை,

"மாதவி தன்துறவும் கேட்டாயோ தோழீ
மணிமேகலை துறவும் கேட்டாயோ, தோழீ" (சிலப்பதிகாரம், 29: 7)

என்னும் வரிகள் வாயிலாக விளங்கிக் கொள்ள இயலுகின்றது. ஆனால் மணிமேகலை துறவு மேற்கொண்டால் என்பதான செய்தி, மணிமேகலைக் காப்பியத்தின் கடைசி வரியான,

"பவத்திறம் அறுகென பாவை நோற்றனள்"

என்ற இடத்தில் மட்டுமே வருகிறது. இவ்விடத்தில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் முரண்படுவதை உணர இயலும்.

ஆனால் மலர்வனம் புக்க காதையில் மக்கள், "மிக்க அழகையுடைய இவளைத் தவவழியிற் புகுத்திய தாய் மிகவும் கொடியவள்" என்பதினின்று, மணிமேகலையை மாதவி தவவழியிற் புகுத்திவிட்டாளோ என எண்ணத் தோன்றுகின்றது. அவ்வாறாயின் மக்கள் கூற்றின் உண்மை நிலை என்ன? அதே போல சுதமதியிடம் உதயகுமரன், மணிமேகலை எத்திறத்தினள்?" எனக் கேட்க, "அவள் தவவொழுக்கமுடையவள்" என்கிறாள். இது எவ்வாறு சாத்தியம்?

துயிலெழுப்பிய காதையில் மணிமேகலா தெய்வம் உதயகுமரனிடம், "தவத்திறம் பூண்டோள் தன்மேல் வைத்த அவத்திறம் ஒழிக" என அறிவுரை கூறுகின்றது. சுதமதியிடம், "மணிமேகலைக்கு புத்தன் அற நெறியிற் செல்லும் நற்பொழுது வந்துற்றதாகலின் அவளையெடுத்துச் சென்று மணிபல்லவத்தில் வைத்தேன்; அவள் தனது பழம்பிறப்பின் நிகழ்ச்சியை அறிந்து கொண்டு இன்றைக்கு ஏழாவது நாளில் இங்கு வந்து சேர்வாள். இந்நகரில் வேறுவடிவம் கொள்வாளாயினும் உனக்கு அவள் ஒழிப்பாளல்லள்"
என்கின்றது. இதிலிருந்து மணிமேகலை எவ்வித உருமாற்றமும் மேற்கொள்ளாமல் இயல்பான பெண்மணியாகத் தான் இருந்திருக்கின்றாள் என்பதை உறுதி செய்து கொள்ளலாம். ஆயினும் சுதமதி உதயகுமரனிடம், மணிமேகலை தவவொழுக்கமுடையவள் என்பதை, எவ்வாறு முன்னமே கூறினாள் என்பதும் மணிமேகலா தெய்வத்தின் கூற்று வாயிலாகவே தெளிவுபடுத்திக் கொள்ள இயலும். இங்கு அதே துயிலெழுப்பிய காதையில் மணிமேகலா தெய்வம் சுதமதியிடம் கூறும் போது, "அவள் முன்னரே என்னையறிவாள்; கோவலன், "நமது குலதெய்வத்தின் பெயரை இக்குழந்தைக்கு இடுக" என்று சொல்லி, என் பெயரை இவளுக்கிட்ட நாளின் இரவில் மாதவியின் கனவிற் சென்று, "காமன் செயலற்று ஏங்க மாபெறும் தவக்கொடி ஈன்றனை" என்று நனவிற் கூறியது போல நான் கூறியதுண்டு; இதனையும் அவளுக்கு நினைப்பூட்டுதி" என்று கூறுவதினின்று மாதவி மணிமேகலையை தவ ஒழுக்கத்திற்குரியவள் என்பதை முன்னமே அறிவாள் என்பதை அறிய இயலுகின்றது. இதை மனதிற்கொண்டு அவள் முன்னமே, தன் மகளிடமும், பிறரிடமும் இச்செய்தியை உணர்த்தியிருக்க வேண்டும். அது மக்கள் வரை பரவியிருக்க வேண்டும். ஆனால் எந்த நேரத்தில் மணிமேகலையை துறவிற்குள் புகுத்துவது என்று அறியாதவளாக மாதவி இருந்திருக்க வேண்டும். ஆகவேதான் மணிமேகலா தெய்வம், அந்த சமயம் இப்பொழுது வந்திருக்கிறது என்பதை, முன்னர் நடந்த நிகழ்வைக் கூறி சுதமதியிடம், மாதவியை நினைவுபடுத்தக் கூறுகின்றது.

அவ்வாறு பழம்பிறப்பை அறிந்து அமுத சுரபியோடு அறவண அடிகளிடம் வந்த மணிமேகலையை, பாத்திரங்கொண்டு பிச்சை புக்க காதையில் அறவண அடிகள், "இவ்வமுத சுரபியை நீ சும்மா வைத்திருத்தல் தகுதியன்று" என்று கூற, அவள் அவரை வணங்கி, பிக்குணிக் கோலம் பூண்டு வீதியை அடைந்ததாக ஒரு செய்தி குறிப்பிடப்படுகின்றது. ஆனால்,

"பிக்குகள் என்பவர்கள் பொன் போன்ற ஆடையை உடுத்தி, நோன்பும் தவமும் மேற்கொண்டு சிற்றிலும் பேரிலும் நாடிச் சென்று ஐயம் ஏற்று உண்பவர்"

(பௌத்தம், ப-58)

எனக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் இதில் தன்னை துறவொழுக்கம் கொண்ட நிலைபோல, பிக்குணிக் கோலம் பூண்டு அவள் உணவளிக்கச் செல்லக் காரணம், பிற உயிர்களுக்கும், தனக்கும் ஒரு புனிதமான உறவை வலுப்படுத்த, கருணையை தோற்றுவிக்க என பலபட்ட காரணங்கள் இருக்கலாம். காரணம்,

"எல்லாவற்றையும் துறந்து துறவறம் மேற்கொண்ட பின் பிற உயிர்களுக்கு உணவளித்தல் என்பது சாத்தியமற்றது. மிகுதியான உணவை வைத்திருப்பவர்கள், மிகுந்த செல்வர்களே உணவளிக்க இயலும். துறவறம் மேற்கொண்டவர்களிடம் இதனை எதிர்பார்க்க இயலாது"

(keetru.com)

என்னும் கருத்து நோக்கத்தக்கது. இதே போன்று மாதவி துறவறம் மேற்கொள்ளுதற்கு முன், புண்ணியம் தரும் தானம் புரிந்து துறவறத்தை மேற்கொண்டாள் என மாடலன் சேரன் செங்குட்டுவனிடம் கூறுகின்ற செய்தி சிலப்பதிகாரத்தின் மூலம் முன்னமே எடுத்துக் காட்டப்பட்டது. மேலும்,

"இருபால் துறவியரும் வெறும் சமுதாயத் தொண்டர்களாக மட்டும் இன்றி, பத்துவகைச் சீலங்களும் தானங்களும் ஏனைய பாரமிதைகளும் நிரம்பி பௌத்த தருக்கம், தத்துவம் முதலிய கல்வியும் பயின்று உணர்தல் வேண்டும்"

(பௌத்தம், ப-59)

என்ற அடிப்படையில் நோக்கும் போது மணிமேகலை தன் உருக்களை மாற்றிக் கொண்டு சமுதாயத் தொண்டாற்றியிருக்கிறாள் என்பதையும், பௌத்த சமயக் கொள்கைகளையும் கேட்டு உணர்ந்த பின்னரே துறவியாக இயலும் என்பதையும் அறிய இயலுகின்றது. இறுதியாக பவத்திறமறுகெனப் பாவை நோற்ற காதையிலே அறவண அடிகளை அடைந்து பௌத்த தரும உபதேசங்களை கற்று, அவரால் ஞான தீப வழிகாட்டப் பெறுகின்றாள். அவ்வாறு அவ்வுபதேச மொழிகளைக் கேட்டு ஐயந்திரிபறவுணர்ந்து, பிறவித் துன்பம் ஒழிவதாகவென்று அந்நகரத்திலேயே நோற்றுக் கொண்டிருந்தாள் என்று குறிப்பிடப்படுகின்றது.

இவ்விடத்தில் அவள் பல அனுபவங்களுக்குப் பிறகு, 'துறவு' என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டு, அதை நோக்கிச் செயல்படத் தொடங்குகிறாள் எனக் கூறலாம். இதிலிருந்து துறவுக்குள் செலுத்தப்பட இருந்த ஒரு கணிகை குலத்தைச் சேர்ந்த இளம்பெண், சமுதாயம் மற்றும் தன்னைச் சுற்றி நிகழும் சூழல்களையும் தாண்டி, எவ்வாறு துறவிற்குள் செலுத்தப்படுகிறாள் என்பதையே மணிமேகலைக் காப்பியம் எடுத்துக் காட்டுகின்றது. இதில் மணிமேகலை இளம்பெண் என்பதனால் அப்பருவத்திற்குரிய நிலைபாட்டு நிலைகளைத் தாண்டி வெளிவர இயலாமல் தடுமாறும் இடத்தில், அவளால் துறவிற்கான நிலைகளை கடைபிடிக்க இயலா நிலையைக் காண இயலுகின்றது. இருப்பினும் சாதாரண நிலையில் கட்டமைத்து வைத்துள்ள சமுதாய அமைப்பை கட்டுடைத்துக் கொண்டு, தன் பரந்த வெளியை தனக்கானதாக மாற்றிக் கொண்டு வெளிவரும் மணிமேகலையின் செயல் அக்காலச் சூழலோடு ஒப்பிட்டு பார்க்கும் போது, அது சாதாரண காரியமல்ல. மேலும் மணிமேகலைக் காப்பியத்தை, 'மணிமேகலைத் துறவு" என ஒற்றைத் தளத்தில் நோக்குவதை விடுத்து, அதனுள் பரந்து விரிந்து கிடக்கும் பல்வேறு சமுதாய சிக்கல்களையும், அதை அது கட்டுடைக்கின்ற பான்மையினையும் நோக்குதல் வேண்டும்.

**நிறைவாக**

இவ்வாறாக,

- துறவானது உணர்ந்து செயல்பட வேண்டிய ஒன்று. அது பிறர் கட்டாயத்தால் தோன்றும் போது, அது குறைபாடுடையதாகவே இருக்கும் என்பதும்,
- மணிமேகலை, துறவு மேற்கொள்வதற்கு மாறான சில மாறுபட்ட செயல்பாடுகளைப் புரியக் காரணம், அவளது இளமையும், அனுபவமில்லாமையும், சமயம் சார்ந்த விஷயங்களைக் கற்று உணராததுமேயாகும் என்பதை வெளிப்படையாகக் காண இயலுகின்றது.
- மணிமேகலையின் துறவு, தனிப்பட்ட நிலையினின்றும் பொதுமைத் தன்மைக்கு வர வற்புறுத்துகின்றது. பெண்ணின் வெளியை பரந்துபட்டதாக்குகின்றது. இருப்பினும் நிர்வாண மோட்சத்தில் மட்டும் பௌத்தம் தன் ஆணாதிக்க நிலையை தளர்த்த இயலா நிலையிலேயே இருக்கின்றது. அதாவது நிருவாணப் பேறு அடைய ஒரு பெண் அடுத்த பிறவியில் ஆணாகப் பிறந்தால் மட்டுமே சாத்தியம் எனும் கொள்கையை இறுகப் பிடித்திருக்கிறது.
- மணிமேகலையினூடாக சாத்தனார் கட்டமைத்திருக்கும் புரட்சிக்கான வெளிகள், அதை வெறும் மணிமேகலைத் துறவு, கணிகையின் கதை என்பதையும் தாண்டி, பரந்து பட்ட தளத்தில் அதன் பரப்பை இன்னும் விரிவடையச் செய்திருக்கிறது என்பதை மணிமேகலையின் ஒவ்வொரு கருத்து நிலைகளும் நிறுவி நிற்பதையும் காண இயலுகின்றது.

**துணை நின்ற நூற்கள்**

1. சிலப்பதிகாரம் மூலமும் தெளிவுரையும், ஜெ.ஸ்ரீசந்திரன், வர்த்தமானன் பதிப்பகம்,ஒன்பதாம் பதிப்பு, ஆகஸ்டு 2001.
2. மணிமேகலை, உ.வே.சாமிநாதையரெழுதிய அரும்பதவுரை, டாக்டர் உ.வே.சா நூல்நிலையம், எட்டாம் பதிப்பு, 2008.

3. பௌத்தம், சோ.ந.கந்தசாமி, சென்னைப் பல்கலைக்கழகம், 1977.
4. பௌத்தமும் தமிழும், மயிலை சீனி. வேங்கடசாமி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1972.
5. http://www.dinamani.com/weekly-mani/article656758.ece?service=print
6. https://nmuthumohan.wordpress.com,
7. https://plus.google.com, The Hindu, புத்தரின் மௌனப்புரட்சி.
8. keetru.com/index.php?option=com...**2012**...**31**...**2012**...
9. puthu.thinnai.com, மு.பழனியப்பன், பெண்ணிய வாசிப்பில் மணிமேகலை.
10. raviaaivu.blogspot.com.

**Book Editors: M.Maridass and G.Raju. தமிழ் மற்றும் அறிவியல் படைப்புகள் 2015, Published by Gayathri Publishers,Tirunelveli,Tamil Nadu,India dated on 15,December,2015.**

**ISBN :978-81-931923-8-2**

# பாரதிதாசன் நாடகங்களில் சமுதாய சிந்தனைகள்

**முனைவர் உமா,**
தமிழ் துறை பேராசிரியர்,
தமிழ் துறை, திருவள்ளுவர் பல்கலை கழக கலை மற்றும் அறிவியல் கல்லுரி,
கழல் நாயக்கன்பட்டி, திருப்பத்தூர் - 635901

## முன்னுரை:

தமிழ் சமூகம் தம் வாழ்க்கையை மையமிட்டு பல சிக்கல்கள் நிறைந்தது. அவர்களின் சாதி, சமய வேறுபாடு, மரபுவழி பழக்கவழக்கங்கள், முன்னோர்களின் கட்டுபாடுகளால் ஏற்படும் சமூக சிக்கல்கள் ஆகியவற்றை நாடகங்கள் வாயிலாக அதனுடைய ஆசிரியர்கள் கல்வி அறிவு இல்லாத மக்களுக்கு கொண்டு சேர்க்கும் வண்ணம் அறிவுறுத்துகிறார்கள். 19ஆம் நூற்றாண்டில் பாரதியார் அவர்கள் தேசப்பற்றையும், பெண்கள் விடுதலையும் பற்றி பேசிய காலத்தில் பாரதிதாசன் அவர்கள் தமிழ் மொழிப்பற்றையும் பெண்ணின் விடுதலைப் பற்றியும் தம்முடைய படைப்புகளான கவிதைகள், நாடகங்கள், கட்டுரைகள் ஆகியவற்றின் வழியே எடுத்துரைத்தார். குறிப்பாக நாடகங்கள் வழியே கீழ்நிலை மக்களுக்கும் தன்னுடைய கொள்கையைக் கொண்டு சேர்த்தார்.

## நாடகம்:

“இயலும் இசையும் சேர்ந்து கதையை தழுவி வரும் கூத்தே நாடகம் ஆகும்”[1] என்கிறார் எம்மார் அடைக்கலசாமி. ஆயக்கலைகள் 64 என்றால் அக்கலைகளின் ஒருமித்த மொத்த வடிவமாக நிலைப் பெற்று திகழ்வதால் தான் கலைகளுக்கெல்லாம் தலையாயக் கலை நாடகக்கலை என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். மேலும் “நாடகம் நாட்டிற்கு அணிகலன் நாகரிகத்தின் திறவுக்கோல், நாட்டின் பிரதிபலிப்பு, பாமரர்களின் பல்கலைக்கழகம், சமுதாய சீர்கேடுகளை தகர்க்கும் வாள்வீச்சு. இதயநாதத்தின் எழுச்சி, காலத்தின் கண்ணாடி, லட்சிய கனவுகளை எல்லாம் ஈடேற்றி வைக்கும் அற்புத சாதனம்”[2] என்கிறார் கு.சா. கிருஷ்ணமூர்த்தி. நாடகம் மக்கள் மகிழும் வகையில் உணர்ச்சிப் பூர்வமாக ஏற்றுக் கொள்ளும் வகையில் கருத்துக்களை வெளியீடுகிறது.

## நாடகத்தின் பயன்

“நாடகம் சமுதாயத்தோடு தொடர்புடைய ஒரு பண்பாட்டுக் கலை, நல்ல கூர்மையானக் கத்தியை போன்றது அது, கத்தியை கனி நறுக்கவும் பயன்படுத்தலாம்”[3] பல நூல்களைக் கற்பதை காட்டிலும் ஒரு நாடகத்தைப் பார்ப்பதால் அடையும் அறிவு மிகுதியானது, பார்ப்பவர் உள்ளத்தில் பசுமரத்தாணிப்போல கருத்துக்களை பதிய வைக்கும் ஆற்றல் மிக்கது நாடகக்கலை ஆகும். 20ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் நாடகக் கலையை வன்மை மிக்க விளம்பரக் கருவியாக நாடக ஆசிரியர்கள் பயன்படுத்தினர். குறிப்பாக பாரதிதாசன் அவர்கள் பெண்ணிய பிரச்சனைகளையும் சமுதாய சீர்கேடுகளையும் தன்னுடைய நாடகங்கள் வாயிலாக மக்களுக்கு கொண்டு சென்றார்.

## சமுதாயம்:

சமுதாயம் என்பது பல்வேறு நிலைகளின் கட்டமைப்பே ஆகும். சமூகம் என்பது பல குடும்பங்களின் கூட்டுறவு. “சமுதாயம் ஒரே மாதிரியான, ஒரே சீரான அமைப்பினை கொண்டதல்ல. அது வேறுபாடுகளாலும் முரண்பாடுகளாலும் ஆனது. புற வயத் தாக்கங்கள் பெறுவது இத்தன்மைகள் காரணமாக அளவிலும் பண்பாலும் அது மாறுபாடு கொள்கிறது. இம்மாறுபாடுகள் எப்போதும் முன்னோக்கிய நிகழ்கின்றன என்பதைப் பார்க்க முடிகிறது”.[4]

## சமுதாய சிந்தனைகள்:

மனிதனின் வாழ்க்கை முறை அவன் வாழும் சமுதாயத்தோடு நெருக்கமான முறையில் அமைந்த ஒன்று. அவனது செயல்முறைகள் அனைத்தும் சமூகக் கட்டுப்பாடுகளுக்கே உட்பட்டே இருக்கிறது. மனிதன் அவன் வாழும் சமுதாயப் பண்பாட்டின் அடையாளமாகவே காணப்படுகிறான். பாரதிதாசன் நாடகங்களில் கதையமைப்பு தனிமனிதனின் வாழ்க்கைமுறையை தம் நாடகத்திற்கு கதையாக எழுதியுள்ளார்.

## பெண்ணியச் சிந்தனைகள்:

''காலங்காலமாக சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் ஏராளம். அவர்கள் இன்றைய காலக்கட்டத்திலும் பல பிரச்சனைகளுக்கு ஆளாகின்றனர் என்பதை நடைமுறை உண்மையாகும்''[5]. நாடகங்களின் பெண்களைப் பற்றிக் குறிப்பிடும் ஆசிரியர்கள் ஆண்களுக்கு அடிமையாக பெண்கள் இருப்பதையே காட்டியுள்ளனர். தமிழில் பெரும்பான்மையான நாடகங்களில் பெண்களின் முக்கிய பிரச்சனைகளான பெண் கல்வி, வரதட்சணை, விதவை திருமணம், பொருந்தா மனப்பிரச்சனைகள், பெண்ணடிமை நிலை ஆகியவை பற்றியே பேசப்பட்டிருக்கின்றன. பாரதிதாசன் நாடகங்களில் பெண் மனம், பெண்கல்வி, பெண் உரிமை, தொழிலாளர் நிலை, தமிழுணர்வு ஆகியவைப் பற்றி விளக்கி உள்ளதைக் கீழே காண்போம்.

**பெண் மனம்:**

பெண்களின் வாழ்க்கை என்பது மிகவும் போராட்டம் மிக்கது ஆகும். பெண் மனம் பெரிதும் அகநோக்கு சிந்தனை உடையது.

**''வல்லமை பேசியுன் வீட்டில் - பெண்**
**வாங்கவே வந்திடு வார்கள்சில பேர்கள்**
**நல்ல விலை பேசுவார் - உன்னை**
**நாளும் நலிந்து சுமந்து பெற்றோர்கள்**
**கல்லென உன்னை மதிப்பார் - கண்ணில்**
**கல்யாண மாப்பிள்ளை தன்னையுங் காட்டார்**
**வல்லி உனக்கொரு நீதி - இந்த**
**வஞ்சகத் தரகர்க்கு நீ அஞ்சவேண்டாம்''[6]**

பெண் பற்றி இத்தகைய சிந்தனை அக்காலத்தில் இருந்து காலங்காலமாக காணப்படுகிறது. இதழ்கள், கதைகள், தொலைக்காட்சி, கணிப்பொறி ஆகியவற்றிலும் பெண்களை இதே போன்று எடுத்துக்காட்டி விமர்ச்சிக்கப்படுகின்றன. ஆனால் பெண்ணிய சிந்தனை நாடகங்கள் இதிலிருந்து மாறுபட்டு பெண்ணின் மனது தூய்மையானதாகவும் அவர்களின் உள்ள திறமைகளை வெளியுலகிற்கு எடுத்துக்காட்டுவதாகவும் அமைகிறது. பாரதிதாசனின் 'இன்பகடல்' நாடகத்தில் வரும் தங்கம் கடைசி வரை தன்னுடைய நிலையில் உறுதியாக நின்று தன் காதலனை கரம் பிடிக்கின்றாள். பெண் மனதின் தனித்தன்மையை பாரதிதாசன் இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டுகிறார்.

## பெண் கல்வி:

'படித்தப்பெண்கள்' நாடகத்தை பெண் கல்வி, பெண் விடுதலை ஆகியவற்றை வற்புறுத்தும் நோக்கத்துடன் எழுதியுள்ளார் அதனால் தான் இந்நூலுக்கு 'படித்தப்பெண்கள்' என்னும் தலைப்பும் கொடுத்துள்ளார். படித்தப் பெண்களான மின்னொளி, இன்னமுது ஆகிய இருவரையும் மிக உயர்ந்தவர்களாகப் படைத்துள்ளார். இவர்களே முதன்மை கதை மாந்தர்களாகவும் காணப்படுகின்றனர்.

தன் கணவன் பெண்கள் மீது கொண்ட கீழான எண்ணங்களை மாற்றியதோடு மட்டுமில்லாமல், சமூகத்தில் அனைவரும் மதிக்கும் மனிதனாக மாற்றுகின்றனர்.

படித்த பெண்களே! கொலை முயற்சியினின்று என்னை நல்ல நிலை நிறுத்திக் காத்தீர்கள் மண், கல் என்று நினைத்தேனே, பெண் கல்வியை! காட்டாறு போலக் கண்ட படி நடக்கும் காயையருக்கும் நல்லொழுக்கம் ஊட்டாமல் ஊட்டி உயர்நிலைப்படுத்துவார் கற்றறிந்த ஒன்டொடியார் என்பது கண்டேன் என்று பொன்னன் கூறியதிலிருந்து பெண் கல்வியின் மேன்மையை உலகிற்கு பாரதிதாசன் எடுத்துக்காட்டியுள்ளார்.

மேலும் 'பறவைக்கூடு' நாடகத்தில் புன்னை என்ற பெண்ணை கல்வி அறிவும் மற்றும் முற்போக்கு சிந்தனை உடையவராகவும் படைத்துள்ளார்.

## பெண் உரிமை:

பெண்களுக்கு சட்டத்தின் மூலமே உரிமைகள் பெறக் கூடிய சூழல் தற்காலத்தில் உள்ளது. தன்னுடைய வாழ்க்கை துணையை தேர்ந்தெடுக்கும் உரிமைக்கூட பெண்களுக்கு இல்லாத நிலையே பெரும்பாலும் காணப்படுகிறது. தன்னுடைய 'பறவைக்கூடு' நாடகத்தில் கரும்பாயிரம், சொக்கு என்பவர் மூலம் மணப் பேச்சினை எழுப்பி புன்னையை மணந்து கொள்ளும் விருப்பத்தை தெரிவிக்கிறார்.

''நான் அவர் மகள், என் தகப்பனார் தாம் இவர், நான் கரும்பாயிரத்தை மணந்து கொள்ள நினைத்ததில்லை, நினைக்கவும் மாட்டேன், என் தந்தைக்கும் அந்த கருத்தில்லை''[7] என்ற கூற்றிலிருந்து புன்னை என்ற பாத்திரத்தின் வழியே பெண்ணுரிமை சிந்தனையை பாரதிதாசன் எடுத்துரைக்கிறார்.

## தொழிலாளர் நிலை:

தொழிலாளர் உரிமைகள் முதலாளிகளால் சுரண்டபடுவதையும் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய கூலிப் பணம் இழுத்தடிக்கப்படுவதையும் தம் நாடகமான 'பொருமை கடலினும் பெரிது' வழியே எடுத்துரைக்கிறார்.

இந்த நாடகத்தின் பெரிய எஜமானிடம் வீட்டு கணக்கன் தன் மனைவியை பாம்பு கடிக்க அதனால் வருந்தி அவரிடம் வந்து மருந்து கேட்கிறான். அவன் சூழ்நிலையை புரிந்து கொள்ளாமல் தன்னுடைய வேலையை செய்யும்படி அவனிடம் கூறுவதிலிருந்து முதலாளிகள் தொழிலாளிகள் மீது கொண்டுள்ள அக்கரையின்மையை பாரதிதாசன் எடுத்துரைக்கிறார்.

## தமிழ் உணர்வு:

பாரதிதாசனின் தமிழ் உணர்வினை

**"தமிழுக்கம் அமுதென்று பேர்! – அந்தத்**
**தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"[8]**

என்ற பாடல் வரிகள் மூலம் தமிழ் தன் உயிருக்கு சமமாக கருதியத் தன்மையை காணலாம். இவருடைய நாடகங்களில் கதை மாந்தர்கள் பெயர்கள், 'இன்பக்கடல்' நாடகத்தில் இளவழகன், என்ற பெயரும் 'பறவைக்கூடு' நாடகத்தில புன்னை, பொன்னரசு ஆகிய பெயர்களும், படித்த பெண்கள் நாடகத்தில் மின்னொளி, இன்னமுது என்ற பெயர்களும் இனிய தமிழ் பெயர்களாக அமைத்திருப்பதில் இருந்து இவருடைய தமிழுணர்வை அறியலாம்.

## முடிவுரை:

பாரதிதாசன் நாடகங்களில் சமுதாய சிந்தனைகளில் பெரும்பாலும் பெண் முன்னேற்றம். பெண் விடுதலை, பகுத்தறிவு கருத்துக்கள், தமிழ்ப்பற்று ஆகியவை முதன்மை கருப்பொருளாக அமைகிறது. மேலும் எக்கால சூழ்நிலைக்கும் ஏற்ற ஒரு சிந்தனையாகவே அமைவதையும் மேற்கூறிய கருத்துக்கள் வழியே அறியலாம்.

## குறிப்புகள்

1. எம்மார்.அடைக்கலசாமி, தமிழ் இலக்கிய வரலாறு, ப.302
2. கவிஞர் கு.சு.கிருஷ்ணமூர்த்தி, தமிழ் நாடக வரலாறு, ப.22
3. வாழ்வியல் களஞ்சியம் தொகுதி – 11, ப.400
4. தி.சு.நடராஜன் திறனாய்வு, அணுகுமுறைகளும், கொள்கைகளும் ப.53
5. முனைவர் சு.ருக்குமணி, தமிழ் நாடகத்தில் பெண்ணியம் ப.52
6. பாரதிதாசன் கவிதைகள் ப.93
7. டாக்டர் சா.சு.இளங்கோ, பாரதிதாசன் புதிய நாடகங்கள், ப.47
8. பாரதிதாசன் கவிதைகள், ப.73

**Book Editors: M.Maridass and G.Raju. தமிழ் மற்றும் அறிவியல் படைப்புகள் 2015, Published by Gayathri Publishers,Tirunelveli,Tamil Nadu,India dated on 15,December,2015.**

**ISBN :978-81-931923-8-2**

# ‘தென்றலின் சுவடுகள்’ கவிதை தொகுப்பில் சமுதாயப் பிரச்சனைகள்

**ரா.ரேவதி,**

முதுகலைத் தமிழ் முதலாம் ஆண்டு,
எஸ்.எ.ஃ.ப்.ஆர் மகளிர் கல்லாரி, சிவகாசி
**மின்னஞ்சல்:** revathiskrp@gmail.com

**முன்னுரை**

‘தென்றலின் சுவடுகள்’ (பெண்கள் ஹைக்கூ) என்ற நூலை கன்னிக்கோவில் ராஜா, நிலாப்பிரியன், தமிழ்மகாலி போன்றோர் தொகுத்து தந்துள்ளனர். இந்நூலில் காணப்படும் ஹைக்கூ கவிதைகள் அனைத்தையும் பெண்களே எழுதியுள்ளனர். இக்கவிதைத் தொகுப்பில் காணப்படும் பெண் சிசுக்கொலை, முதியோர் இல்லம், வரதட்சணை, வறுமை, பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்கள், மனிதநேயமின்மை போன்ற சமுதாயப் பிரச்சனையைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**முதியோர் இல்லம்**

தன்னை தூக்கி வளர்த்த பெற்றோர்களை ஏதோ சுமைகளைப் போலக் கருதி அவர்களை முதியோர் இல்லத்தில் கொண்டு சேர்க்கும் கொடூரச் செயல் இச்சமுதாயத்தில் காணப்படுகின்றது. சர்வ தேச முதியோர் தினம் அக்டோபர் 1-ம் நாள் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

“விழுதுகள் வேர்களாக
அடிமரம் அடைக்கலமானது
முதியோர் இல்லத்தில்” (கலாவிசு-19)



விழுதுகளாக இருந்த பிள்ளைகள் வேர்களாக மாறி ஆட்சி புரிந்து கொண்டு, வேர்களாக இருந்த தாய், தந்தைகளை முதியோர் இல்லத்தில் கொண்டு விட்டு விடுகின்றனர். உணர்ச்சிகளை புரிந்து கொள்ளாதது விலங்கு ஆகும். விலங்கு செய்கின்ற செயலையே மனிதனும் செய்கின்றான்.

**மனிதநேயமின்மை**

"அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்க என்புதோல் போர்த்த உடம்பு" – திருவள்ளுவர். கணியன் பூங்குன்றனார் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று கூறினார். "வாடியைப் பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்றார் வள்ளலார். இவ்வாறு மனிதநேயம் பற்றி கூறியுள்ளனர். இத்தகைய மனிதநேயம் இன்று குறைந்து வருகிறது.

"குறைந்தது மனித நேயம்
பெருகியது
முதியோர் இல்லம்" (மலர்மகள்-22)



மனிதநேயம் இல்லாமல் மகனே தன் தாய், தந்தையை முதியோர் இல்லத்தில் கொண்டு சேர்த்துவிடும் அவலநிலை தான் காணப்படுகிறது. மனிதநேயமின்மையால் முதியோர் இல்லம் பெருகி கொண்டே தான் இருக்கிறது. மூலைக்கு மூலை முதியோர் இல்லமே காணப்படுகிறது.

**பெண்களுக்கானப் பிரச்சனைகள்**

பெண்களுக்கு எதிராக பல கொடுமைகள் சமூகத்தில் காணப்படுகின்றன. வரதட்சணை கொடுமை, பாலியல் வன்கொடுமை போன்ற பெண்களை இழிவு படுத்தும் சில செயல்கள் சமூகத்தில் காணப்படுகின்றன.

"எப்போதும் மீட்டினால்
மற்றவேலை என்னாவது
சரஸ்வதி கையில் வீணை"(ஞான பாரதி-17)

பெண்களை எப்போதும் அடிமை படுத்தி கொண்டே இருந்தால் அவர்கள் முன்னேறுவது எக்காலம்? பந்தை நீரில் அழுத்த அழுத்த அப்பந்து வெளியே வரதான் முயற்சிக்குமே தவிர உள்ளே செல்லாது. அது போல தான் பெண்களை அடக்க அடக்க பெண்கள் விடுதலை அடையத்தான் முயற்சிக்கிறார்கள்.

**வரதட்சணை கொடுமை**

திருமணம் என்ற பெயரில் ஆண், பெண் வீட்டாரிடம் இருந்து நகைகள் மற்றும் பரிசுப் பொருள்களை பெறுவதே வரதட்சணை ஆகும்.

"வரதட்சணை அடுப்பில்
இலவச விறகு
மருமகள்"

வரதட்சணை கொடுக்க வில்லை என்றதும் வீட்டிற்கு வந்த மருமகளை பல இன்னல்களுக்கு ஆளாக்குகின்றனர். வரதட்சணையால் சில பெண்களின் வாழ்க்கை மலர்ந்தும் சருகாய் காணப்படுகின்றன. பெண்களே பெண்களுக்கு தீங்கு விளைவிக்கின்றனர். தன் மகளுக்கு கொடுத்த வரதட்சணையை தன் மருமகள் வழியாக வசூல் செய்கிறாள்.

**வறுமை**

ஏழை வீட்டில் அழையாத விருந்தாளியாக வறுமை உள்ளது. வறுமை நிலை அக்காலத்தில் இருந்தே காணப்படுகின்றன. வறுமை காரணமாக மக்கள் சாலையோரங்களில் வசித்து, தங்கள் வயிற்று பசிக்கு மிகவும் துன்பப் படுகின்றனர்.

"பணத்தின் பிடியில்
சிக்கித் தவிக்கும்
ஏழ்மை" (இரா.ராணி-28)

பணம் இல்லாதவன் ஏழையாக காணப்படுகின்றான். திருஷ்டிகாக உடைக்கப்படும் பூசணி காய்கள் நடைபாதைவாசிகளுக்கு உணவாக உள்ளன. தினமும் விரதம் கொண்டு அரை வயிறு கஞ்சி குடித்து அமைதியான வாழ்க்கை வாழ்கின்றனர். உலக வறுமை ஒழிப்பு தினம் (*International Day for the Eradication of Poverty*) ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 17ம் நாள் உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது. உலகளாவிய ரீதியில் வறுமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி பசிப்பிணியில் இருந்து மக்களை விடுவிப்பதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு 1992-ம் ஆண்டு வறுமை ஒழிப்பு நாளை அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொண்டது.

**குழந்தை தொழிலாளர்கள்**

ஒவ்வொரு ஆண்டும் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு தினமாக ஜூன் 12ம் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இத்தகைய தினம் இருந்தும் குழந்தை தொழிலாளர் நிலை ஒழியவே இல்லை. குழந்தைகளை தொழிலில் ஈடுபடுத்தக் கூடாது என்று பல்வேறு சட்டங்கள் கொண்டு வரப்பட்டாலும் அவர்கள் சமூகத்தில் தொழிலாளராகவே காணப்படுகின்றனர். அதற்கு காரணம் அவர்களின் வறுமை.

"அடகு வைக்க
அகப்பட்டான் மகன்
குழந்தைத் தொழிலாளி" (சீரா.அரங்க நாயகி ராவ்-36)



குடும்பத்தில் வறுமை காணப்படுவதால் குழந்தைகள் சிறு வயதிலே தொழிலில் ஈடுபடுகின்றனர். 'வீடுதோறும் செய்தித்தாள் போடுகிறான் படிக்காதவன்'. சாதாரண மனிதனின் கனவு என்ன என்னவே இருக்கும். ஆனால் ஏழைச் சிறுவனின் பகல் கனவு தட்டு நிறைய உணவு இருப்பதாகவே இருக்கிறது. சுமைதாங்கியாக குழந்தைகள் உள்ளனர். அவர்களின் கல்வி கேள்விக்குறியாக உள்ளன.

**வன்முறை**

சமூகத்தில் சாதி, மதப்பிரச்சனைகள் காணப்படுகின்றன. சாதி, மதப் பிரச்சனைகள் நம் இந்தியாவில் மட்டும் தான் காணப்படுகின்றன. வடியும் இரத்தத்தில் சாதி தெரிவதில்லை என்று கவிமணி கூறி சென்றார்.

"வானத்திலும் கலவரமோ
மிரண்டோடும்
மேகக்கூட்டம்" (ஞானபாரதி-17)

சாதி, மதப் பிரச்சனையால் நாட்டில் கலவரம் காணப்படுகின்றன. இதில் பலர் இறந்து போகின்றனர். வன்முறை செயல்கள் காணப்படுவதால் மக்கள் அலறி அடித்துக் கொண்டு ஓடும் செயலை மேகக் கூட்டங்கள் விளக்குகின்றன.

**சாதிப்பிரச்சனைகள்**

சாதிகள் என்ற பெயரில் நாட்டில் வன்முறைகள் பல வெடிக்கின்றன. அதில் பல உயிர் பலி ஏற்படுகின்றன. 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாரதி கூறினார். ஆனால் இன்று சாதிகள் பெயரில் பல வன்முறை செயல்கள் காணப்படுகின்றன.

"வெள்ளை உடுப்புகள்
கறுப்பு மனம்
சாதித் தலைவர்." (பாரதா-30)

வெண்மை நிறம் அமைதியை குறிக்கும் நிறம். வெள்ளை ஆடையை அணிந்து கொண்டு சாதிப் பிரச்சனையை ஏற்படுத்தும் கறுப்பு மனம் கொண்ட சாதித் தலைவர்கள் பலர் சமூகத்தில் உள்ளனர். நாட்டில் தீவிரவாதம் தலை விரித்து கொண்டு ஆடுகின்றன.

**மதப்பிரச்சனைகள்**

அரசியலமைப்பு படி இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு. ஆனால் பெரிய அளவிலான வன்முறை இந்தியாவில் காணப்படுகின்றன. எங்கள் கடவுள் தான் உயர்ந்தவர் என்று ஒவ்வொரு மதத்தினரும் சண்டை போட்டு கொள்கின்றனர். இதனால் நாட்டில் தீவிரவாதம் ஏற்படுகிறது. இதனால் உயிர் சேதம் ஏற்படுகிறது.

"கூட்டு வழிபாடு
வேண்டுதல்கள்
தனிதனியே." (கவி.வெற்றிச்செல்வி சண்முகம்-61)

கூட்டு வழிபாடு செய்கிறோம் என்று கூறுகின்றனர். ஆனால் தனிதனியே தங்கள் கடவுளை வழிபடுகின்றனர். திருவிழா என்று ஒன்றாக கொண்டாட ஆரம்பிக்கின்றனர். இறுதியில் தீவிரவாதத்தில் முடிகின்றன.

**இயந்திர மோகம்**

மக்கள் இயந்திர மோகம் கொண்டு இயந்திரத்தில் தங்கள் வாழ்க்கையை தொலைத்துக் கொண்டு வாழ்கின்றனர். அறிவியல் வளர்ச்சியால் சில நன்மைகள் நமக்கு ஏற்படுகின்றனர். ஆனால் அவையால் பல தீமைகளும் நமக்கு ஏற்படுகின்றன.

"இணையதள வலையில்
சிலந்திகளும் சோர்ந்தன
மனிதன் முயற்சி" (நா.சுப்புலட்சுமி-26)

இணையதளத்தால் மனிதனின் முயற்சி சோர்ந்து கொண்டு வருகின்றன. தொலைக்காட்சியில் தங்களின் பொழுதையெல்லாம் வீணாக்கிக் கொண்டுள்ளனர் மேலும் தொலைகாட்சி தொடர்களால் பட்டப் பகலில் அச்சமின்றி திருட்டு நடைபெறுகிறது. தொலைபேசியில் வாழ்த்துக்களும் வருகின்றன, வசைகளும் வருகின்றன.

**வேலையில்லா திண்டாட்டம்**

சமூகத்தில் இன்று வேலையில்லாத் திண்டாட்டமே அதிகம் காணப்படுகின்றன. வேலையில்லாததால் திருட்டு தொழிலை செய்ய ஆரம்பிக்கின்றனர்.

"நிழல் தந்த மரங்களை
தேடிக் கொண்டிருக்கிறான்
பட்டதாரி" (க.தேவி-56)

படித்தால் வேலை கிடைக்கும் என்று படிக்கிறான். படித்தும் வேலை கிடைக்கவில்லை என்றதும் வாழ்வில் மனிதன் சோர்ந்து விடுகிறான். ஒரு கட்டத்தில் தான் வாழ்வதற்கு தேவையானதை பிறரிடம் இருந்து பறித்துக் கொள்ளும் செயலை செய்ய ஆரம்பிக்கிறான்.

**வெளிநாட்டு மோகம்**

படித்து விட்டு அயல் நாட்டுகளுக்கு சென்று வேலை செய்ய வேண்டும் என்கின்ற மோகம் இன்றைய இளைஞர்களிடம் அதிகம் காணப்படுகின்றன.

"இந்திய பணத்தில்
இதய அறுவை நிபுணன்
இருப்பது அமெரிக்காவில்" (இரா.கஸ்தூரி ராசா-114)

உள் நாட்டில் படித்து விட்டு உள்நாட்டிலே வேலை செய்தால் அந்த நாடு முன்னேறுவதற்கு வாய்ப்பு உள்ளது. அப்போது தான் தன் நாடு ஒரு வல்லரசு நாடாக மாறும்.

**முடிவுரை**

மேலும் சமூகத்தில் நாகரிக மோகம், மக்கள் வாழ்க்கை முறையில் மாற்றங்கள், அடிமை முறை, இளைஞர்களின் செயல்கள் போன்ற பல பிரச்சனைகள் காணப்படுகின்றன.

**Book Editors: M.Maridass and G.Raju. தமிழ் மற்றும் அறிவியல் படைப்புகள் 2015, Published by Gayathri Publishers,Tirunelveli,Tamil Nadu,India dated on 15,December,2015.**

**ISBN :978-81-931923-8-2**

# சிட்டுக்குருவி ஏன் அழிகின்றது அதை எப்படி பாதுகாப்பது

**ந.சுபாஷ் மற்றும் க. ராஜு**

**விலங்கியல் துறை**
**பயோணீர் குமாரசுவாமி கல்லுரி**
**நாகர்கோவில்**

**மின்னஞ்சல்: rajumaran@yahoo.co.in**

## முன்னுரை

பல்லாயிரக்கணக்கான உயிர்கள் வாழும் இப்புவியில் ஒவ்வொரு உயிர்களும் தனித்துவமானது அதே நேரம் ஒவ்வொன்றும் ஒன்றை ஒன்று சார்ந்த மிகசிறப்பாக அமைந்த இயற்கை சங்கிலியின் கண்ணிகள். நவீன உலகின் பொருளாதார எழுச்சியால் அவற்றில் சில கண்ணிகள் அழிந்து வருகின்றது அவற்றில் தவிர்க்க முடியாத கவனத்தில் கொள்ளவேண்டிய ஓர் அழகிய பறவை சிட்டுக்குருவி.

காட்டு பகுதியின் வளத்தை அப்பகுதியில் வாழும் யானை, புலி போன்ற விலங்குகளின் எண்ணிக்கையை அறிகிறோம், அவற்றின் எண்ணிக்கை குறைந்தால் காட்டின் தன்மையும் வளமையும் குறைவதாக அறிந்து அப்பகுதியை காப்பாற்ற கூடுதல் கவனம் செலுத்துகின்றோம்; மனிதனின் வாழ்வியல் சூழலுடன் வலுவான பிணைப்பை கொண்ட சிட்டுக்குருவிகள் ஒருவகையில் மனிதனின் வாழ்வியல் தரத்தை சுட்டிக்காட்டும் மானியாக (indicator) கொள்ளலாம்.

### சிட்டுக்குருவியை பற்றிய விவரணம்

ஆங்கிலத்தில் கவுஸ் ஸ்பாரோ (House sparrow) என்று அழைக்கப்படும் சிட்டுக்குருவி (*Passer domesticus*) இனமானது பஸ்ஷேரிடே (Passeridae) விலங்கியல் குடும்பத்தை சார்ந்தது, 25 மேற்பட்ட வகைகளை உடையது. உலகம் பெரும்பாலான இடங்களில் காணப்படும் சிட்டுக்குருவியானது இந்தியா முழுவதும் பரவியுள்ளது.

பொதுவாக சராசரி அளவிலான சிட்டுக்குருவிகள் நீளமும் 15-16 cm (6.3 inches) 24–39.5 gm எடையும் கொண்டது. பெண் மற்றும் இளம் சிட்டுக்குருவிகள் வெளிறிய பழுப்பு மற்றும் சாம்பல் நிறத்தில் இருக்கும். ஆண் குருவிகளுக்கு சாம்பல் நிறத்துடன் அடர்த்தியான கருப்பு, வெள்ளை மற்றும் பழுப்பு நிற குறியீடுகள் இருக்கும். சிறிய ஒல்லியான கால்களை கொண்டது வருடத்தின் மூன்று பருவங்களிலும் இனப்பெருக்கம் செய்யும் இயல்புடையது.

### சிட்டுக்குருவிகளுக்கும் உழவர்களுக்குமான உறவு

கடந்த பத்துவருடங்களுக்கு முன்பு வரை வீட்டு முற்றங்கள் முதல் காடு கழனி வரை எங்கும் நீக்கமற இருந்த சிட்டுக்குருவிகளை பாடாத கவிஞர்கள் இல்லை, ஏனெனில் அவற்றின் கிள்ளை குரலின் இனிமையும் அழகும் அவ்வளவு கவர்ச்சியானது. காலை எழுவது முதல் உறங்கச்செல்லும் வரை அவற்றின் குரல் எப்போதும் நம்மை சுற்றி

இருக்கும், எனவே மகிழ்ச்சியான தருணங்களில் அதை அதிகப்படுத்தியும் துயரமான நேரங்களில் மனதை ஆற்றுப்படுத்தியும் வந்த தோழனாகவும் மருத்துவனாகவும் சிட்டுக்குருவிகளை கொள்ளலாம். பொதுவாக உலகில் பிறந்த நாகரீகங்கள் அனைத்தும் நதிக்கரை நாகரீகங்கள் எனலாம். நதிகளால் நாகரீகங்களை உருவாக்கி உலகை காத்த உழவர்கள் இயற்கையின் மேல் தீரா அன்பும் கருணையையும் கொண்டு ஒன்றை ஒன்று பிரிக்கவியலாமல் வாழ்ந்தனர். இயற்கையுடன் பின்னிப்பிணைந்து வாழ்ந்த உழவர்களின் காலம் சிட்டுக்குருவிகளின் பொற்காலம் எனலாம்.

இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக அறுக்கும் முதல் நெல்கொற்றை கோவிலில் கட்டிய உழவர்கள் சிறுபகுதி கொற்றை தன் தோழனான சிட்டுக்குருவிகளின் உணவுக்காக “குருவிக்கதிர்” என்ற பெயரில் வீட்டுவாசல் பகுதியில் கட்டிதொங்கவிட்டார்கள்.

பெரும்பாலான சிட்டுக்குருவிகள் இனப்பெருக்க காலத்தில் எளிதில் கிடைக்கும் பூச்சிகள் போன்ற புரத உணவுக்காக வயல்களில் நெற்பயிரையே ஆதாராமாக கொண்டு தங்கள் கூடுகளை அமைத்தன அதன்மூலம் இளம் குஞ்சிகளுக்கு அதிக புரதமும், பயிர்களுக்கு தீமை விளைவிக்கும் பூச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு இயற்கையாக அமைந்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பாக அமைந்தது (IPM).

அறுவடையின் போது வயலில் கூடுகட்டி வாழும் சிட்டுக்குருவிகளின் போதிய வளர் பருவம் எட்டாத குஞ்சுகள் உள்ள கூடுகள் இருக்கும் பட்சத்தில் அந்த கூட்டையும் அதை சுற்றி சில அடிகள் கதிரையும் உணவுக்காக விட்டு சிட்டுக்குருவி இனத்தின் பெருக்கத்திற்காக உதவி செய்தனர்.
சென்ற 15 வருடங்கள் முன்பு வரை வீடுகள் காரையாக இருந்தாலும் வெயிலுக்காக பனைஓலை முன்பந்தல்கள் இருக்கும், ஊரின் அனைத்து தொலுவங்களும் பனைஓலையால் ஆனதாக இருக்கும் எனவே சிட்டுக்குருவிகளின் தங்கும் இடமாக இவை இருந்தது.
அடுத்தடுத்து விளைவிக்கப்பட்ட நெல் சிறுதானிய வகைகளால் அனைத்துப்பருவங்களிலும் சிட்டுக்குருவிகளுக்கு தேவையான உணவு கிடைத்தது.

அறுவடை அனைத்தும் இயந்திர உதவி இன்று நடந்ததால் களங்களில் சிதறும் தானியங்கள் அடுத்த மழையில் முளைக்கும் வரை சிட்டுக்குருவிகளுக்கு உணவாக பயன்பட்டது.

ஏன் அழிகின்றது சிட்டுக்குருவி ?
மனிதனாகிய நம்மை நமது வாழ்விடத்தை அதிகமாக சார்ந்து வாழும் சிட்டுக்குருவி இனங்கள் அழிவதற்கும் நாம் தானே காரணமாக இருக்கமுடியும் அப்படியான காரணங்களில் சில.
சென்ற இரண்டு பத்து ஆண்டுகளில் நடைபெற்ற தொழிற் புரட்சியின் காரணமாக பலவகையில் மனிதனின் வாழ்வியல் வசதிகள் உயர்ந்துள்ளது அதேநேரத்தில் அதன் தாக்கம் சுற்றுச்சூழலை வெகுவாக பாதித்துள்ளது.

விவசாயத்தில் ஏற்பட்ட நவீனம் சிட்டுக்குருவிகளின் அழிவில் முக்கியத்துவம் வாய்ந்தது. பூச்சிகொல்லிகள் இனப்பெருக்க காலங்களில் நெற்பயிரில் கூடுகட்ட முடியாதபடி செய்துவிடுகின்றன. பூச்சிகொல்லிகள் தீமை செய்யும் பூசிகளை அழிப்பது மட்டுமல்லாமல் நன்மை செய்யும் பூச்சிகளையும் அழிக்கின்றது அதேசமயம் சிட்டுக்குருவிகளுக்கு கிடைக்கும் பூச்சி உணவை தடைசெய்து இயற்க்கை சங்கிலியை அறுக்கின்றது அதேசமயம் பூச்சி கொல்லிகளின் தாக்கம் சிட்டுக்குருவிகளை இனப்பெருக்கம் செய்ய விடாமல் தடுத்து மலடாக்குகின்றன.

இயந்திரம் மூலம் நடைபெறும் அறுவடையில் தானியங்கள் சிதறுவதில்லை ஆகவே விவசாயிகளுக்கு நன்மை எனினும் அது சுற்றுசூழலை கவனத்தில் கொண்ட நன்மை இல்லை, இம்முறையில் நடைபெறும் அறுவடையில் வைக்கோல் சிதைந்து

மாடுகளுக்கான தீவனம் கிடைப்பதில்லை சிட்டுக்குருவிகளுக்கான உணவும் தடைபெருகிறது.

அரிசி உணவு மதிப்புமிக்கது என்ற கர்ப்பிதத்தால் அதிகப்படியான நெல் உற்பத்தி சிறுதானிய உற்பத்தியை பாதித்து உடல் நலத்தை கெடுத்ததுடன் ஆண்டு முழுவதும் சிட்டுக்குருவிகளுக்கு கிடைத்த உணவை தடை செய்து அவற்றின் அழிவுக்கு வித்திட்டது.

பெருகிய கான்கிரீட் வீடுகளால், குறைந்த கால்நடை வளர்ப்பால் பனை ஓலை பயன்பாடு குறைந்து பனைமரங்கள் அழிந்ததுடன் வீட்டு முன்பந்தல்கள், தொழுவங்கள் மறைந்து சிட்டுக்குருவிகளின் வசிப்பிடங்கள் குறைந்தது.

சமீபத்திய ஆராய்ச்சிகள் செல்போன் கோபுரங்களின் கதிர்வீச்சு சிட்டுக்குருவி இனங்களின் அழிவில் முக்கிய பங்காற்றுவதாக தெரிவிக்கின்றன.

அதிகப்படியான காற்று மாசு மற்றும் ஒலி மாசுகளும் இவற்றின் அழிவில் முக்கிய பங்காற்றுகின்றன.

சிட்டுக்குருவிகளை எவ்வாறு காப்பது ?

சிட்டுக்குருவியினங்கள் பெருக முதலில் அவற்றின் வாழ்விடங்களை உணவை உறுதி செய்வதன் மூலம் அவற்றிற்கு பெரும் நன்மையை செய்யலாம்.

வீட்டு தாழ்வாரங்களில், மாடிகளில் தட்டுகளில் சிறு தானியங்களை, நீரை வைக்கலாம். நாம் சிறுதானிய பயன்பாட்டை அதிகப்படுத்தினால் நாம் பல நோய்களில் இருந்து விடுபடுவதுடன் மிஞ்சிய தானியங்கள் சிட்டுக்குருவிகளுக்கு உணவாக அமையும்.

வெயில் காலங்களில் மொட்டைமாடிகளில் பனையோலை கூரைகள் அமைப்பதன்மூலம் வெயிலில் இருந்து நம்மை தற்காத்துகொள்வதுடன் சிட்டுக்குருவிகளுக்கு அது வசிப்பிடமாக அமையும்.

வீட்டு முன்னறைகளில் சிறிய அட்டைபெட்டிகளை தொங்கவிட்டு சிட்டுக்குருவிகளுக்கு தாங்கும் இடமாக்கலாம்.

அதிகப்படியான வேதி உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளை தவிர்த்து இயற்கை வேளாண்மையில் ஈடுபடலாம்.

கூரைகளுக்கான பனையோலை பயன்பாட்டை அதிகரிப்பதன்மூலம் சிட்டுக்குருவிகளின் தங்கும் இடங்களை அதிகரிக்கலாம்.

ஒலி, காற்று மாசுபாட்டை குறைக்க அனைவரும் முயற்சிக்கவேண்டும்.

அதிக பணம் செலவழித்து வெளிநாட்டு பறவைகளை அழகுக்காக வளர்ப்பதைவிட குறைந்த செலவில் சில அட்டைபெட்டிகளை நிறுவுவதன்மூலம் சிட்டுக்குருவிகள் இயற்கையாகவே குடியேறி நம்மை மகிழ்விக்கும் நமக்கு இது சிறந்த பொழுதுபோக்காக அமையும், நம் வீட்டு சிறுவர்களை இதில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களுக்கு சுற்றுச்சூழல் மீதான ஆர்வமும், உயிர்கள் மீதான பரிவும் கூடும். ஓய்வு நேரங்களை இவ்வாறான செயல்பாட்டில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களுக்கான கல்விச்சூழல் மன அழுத்தங்கள் குறையும், மனது அன்பால் நிறைந்து சமுதாயத்தில் தனித்துவமானவர்களாக உருவாகமுடியும்.

முடிவுரை

சூரிய குடும்பத்தின் தனித்துவமான இந்த பூமி பந்தில் வாழ அனைத்து உயிரினத்திற்கும் சமமான உரிமை உள்ளது. உயிரினங்களை கண்ணிகளாக கொண்ட இப்புவியின் மாபெரும் இயற்கை வலையை அறுத்து மனிதன் பாதுகாப்பாக உயிர்வாழ இயலாது. நாம் ஒன்றை

ஒன்று சார்ந்தவர்கள். இயற்கையை அதிகமாக அனுபவிக்கும் மனிதன் குறைந்தபட்சம் தன் சந்ததிகளுக்காகவாவது  இயற்கையை காக்கவேண்டும்.